வரலாற்றில் கங்கை கொண்ட சோழபுரம்.

# பொருளடக்கம்


பதிப்புரை ...

1 வரலாற்றில் கங்கைகொண்ட சோழபுரம் ... 1

2 கங்கைகொண்ட சோழபுரம் அகழாய்வு ... 10

3 அகழ்வைப்பகம் ... 16

காட்சிப் பெட்டிகள் (தொல்பொருட்கள்)

கல்வெட்டுகள்

செப்புத் திருமேனிகள்

ஓலைச்சுவடிகள்

சிற்பங்கள்

4 கங்கைகொண்ட சோழபுரத்தைச் சுற்றியுள்ள ஊர்கள் ... 48

5 வெற்றி தந்த கலைச் செல்வங்கள் ... 50

6 பின்னிணைப்புகள் ... 52

முதல் இராசேந்திரசோழன்

சிறப்புப் பெயர்கள்

மனைவியர், மக்கள்

கட்டப்பட்ட கோயில்கள்

அதிகாரிகள்

அறிஞர்கள்

கல்வெட்டுகளுக்குரிய மன்னர்கள்

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நூலகம்
நூல் சேர்க்கை
எண்.
சென்னை-600 008

# பதிப்புரை

கங்கைகொண்ட சோழபுரம், "இராசேந்திர சோழன் அகழ் வைப்பகம்" பற்றிய துணை நூலை இத்துறை வெளியிடுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறது. இந்நூலினை இத்துறைப் பதிவு அலுவலர்கள் திரு. மா. சந்திரமூர்த்தி, திரு. கி. ஸ்ரீதரன் மற்றும் காப்பாட்சியர் திரு. கா. நெடுஞ்செழியன் ஆகியோர் எழுதியுள்ளனர். கங்கைகொண்ட சோழபுரம் வரலாறு பற்றியும், கங்கைகொண்ட சோழீச்சுரத்தின் அமைப்புப் பற்றியும், கங்கைகொண்ட சோழபுரத்தின் ஒரு பகுதியான மாளிகைமேட்டில் இத்துறையால் நிகழ்த்தப்பெற்ற அகழாய்வின்போது வெளிப்படுத்தப்பட்ட முதலாம் இராசேந்திர சோழன் அரண்மனை பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் எழுதப்பட்டிருக்கிறது. மற்றும் இத்துறையால் கங்கைகொண்ட சோழபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள அகழ்வைப்பகம் பற்றியும் விளக்கப்பட்டிருக்கிறது. இவ்வகழ்வைப்பகத்தில் மாளிகை மேட்டில் நிகழ்த்தப்பெற்ற அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்களும் மற்றும் கங்கைகொண்ட சோழபுரத்திலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சேகரிக்கப்பட்ட சிற்பங்கள், செப்புத்திருமேனிகள், காசுகள், போர் வாள் போன்ற தொல்பொருட்களும் காட்சியில் வைக்கப்பட்டுள்ளன. இக்காட்சியினைக் கண்ணுறும் பொதுமக்களும், மாணவர்களும் அப்பகுதியின் வரலாற்றுச் சிறப்பினையும், இராசராசன் காலத்திய நாகரிகச் சிறப்பையும் நன்கு உணர்ந்து கொள்ள இயலும். அதைப்போன்றே இந்நூலைப் படிக்கும் அனைவரும் மாமன்னன் இராசேந்திரனின் பெருமையையும், அவனால் அமைக்கப்பெற்ற சோழகங்கம் ஏரி பற்றியும், அவனால் எடுப்பிக்கப்பெற்ற கங்கைகொண்ட சோழீச்சுரம் என்னும் கோயில் பற்றியும், அவனால் உருவாக்கப்பட்ட சோழ கேரளன் மாளிகை என்னும் அரண்மனை பற்றியும் முழுமையாகத் தெரிந்து கொள்ள முடியும். ஆதலால் இவ்வளவு சிறப்புகள் அடங்கிய நூலை உருவாக்கியுள்ள எம் துறை அலுவலர்களான திரு. மா. சந்திரமூர்த்தி, திரு. கி. ஸ்ரீதரன், திரு. கா. நெடுஞ்செழியன் ஆகியோரை மனமாரப் பாராட்டுகிறேன். அவர்கள் மேலும் இத்தகைய

நூல்களை எழுதி இத்துறைக்கும், தமிழகத்திற்கும் படைக்க வேண்டும் என்றும் உளமார வாழ்த்துகின்றேன். இந்நூலினை மிகக் குறைந்த காலத்தில் சிறப்பாக அச்சிட்டுள்ள இத்துறையின் அச்சுப்பிரிவின் போர்மேன் திரு. சீனிவாசன், திரு. அரங்கநாதன், அச்சுப்பிழைத் திருத்துபவர் திரு. குப்புசாமி ஆகியோருக்கும் மற்றும் அவர்களுக்கு உறுதுணையாக உதவிபுரிந்த அச்சுப்பிரிவின் பணியாளர்களுக்கும் இந்நூலைச் செம்மைப்படுத்தித் தந்த திருமதி. மார்க்சியகாந்தி உதவிக் கண்காணிப்புக் கல்வெட்டாய்வாளர்க்கும் எமது நன்றி.

அன்பன்

**நடன. காசிநாதன்**
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

# வரலாற்றில் கங்கைகொண்ட சோழபுரம்

*விஜயாலயன் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு சோழர் ஆட்சியை நிறுவினான். முதலாம் இராசராசசோழன் காலம் வரை தஞ்சை தலைநகராக விளங்கியது, இராசராசனின் மைந்தன் முதலாம் இராசேந்திரன் காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் தலைநகராக உருவாக்கப்பட்டது. ஏறக்குறைய சோழ மன்னர் களின் ஆட்சி இறுதி வரை கங்கைகொண்ட சோழபுரமே தலை நகராக விளங்கியது.*

*சுமார் 250 ஆண்டுகள் தென்னிந்தியாவிலேயே ஈடு இணையற்ற தலைநகராக விளங்கிய கங்கை கொண்ட சோழபுரம் இன்று சிற்றூ ராகக் காட்சி அளித்தாலும் பல அரிய வரலாற்றுச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகிறது.*

*திருச்சியிலிருந்து அரியலூர் வழியாகச் சிதம்பரம் செல்லும் சாலையில் 103 கி·மீ. தொலைவில் அமைந்துள்ளது இவ்வூர். கும்பகோணத்திலிருந்து அரியலூர் செல்லும் பேருந்துகளும் இவ் வழியே செல்லுகின்றன. சிதம்பரத்திலிருந்து கங்கை கொண்ட சோழபுரம் சுமார் 55 கி·மீ. தொலைவில் அமைந்துள்ளது. குடந்தை-சென்னை தேசிய நெடுஞ்சாலை கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகே செல்வதால் இவ்வூரினை எளிதாக அடையலாம்.*

*இராசேந்திர சோழன் வடக்கே கங்கை வரை தன் படையை அனுப்பிப் பெரும் வெற்றி கண்டு 'கங்கை கொண்ட சோழன், என்னும் பட்டம் ஏற்றதும் இம்மாபெரும் நகரை நிறுவினான். கங்கை கொண்ட சோழீச்சுரம் என்ற பெயர் கொண்ட கோயிலையும் இங்கே எடுப்பித்தான்.*

*கங்கை கொண்ட சோழபுரம், கங்காபுரி, கங்காகுண்டம் கங்கைமாநகர் என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறது.*

*கருவூர்த்தேவரால் கங்கை கொண்ட சோழீச்சுரரைப் போற்றிப் பாடப்பட்ட திருவிசைப்பா பதிகங்கள், கலிங்கத்துப்பரணி,*

மூவருலா, விக்ரமாங்கதேவசரிதம் ஆகிய இலக்கியங்கள் கங்கை கொண்ட சோழபுரத்தைக் குறிப்பிடுகின்றன. நகரைப் பற்றியும், மாளிகையைப் பற்றியும் பல குறிப்புகள் அவற்றில் காணப்படு கின்றன.

, மூன்றாம் இராசேந்திர சோழனுக்குப் பின்னர் சோழர் ஆட்சி வலுவிழந்தது. கங்கை கொண்ட சோழபுரத்தில் ஜடாவர்ம சுந்தர பாண்டியனது மூன்றாவது ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு உள்ளது. அவன் கி.பி. 1251-இல் பட்டம் எய்தியவன். பாண்டியப் பேரரசர் களிடையே சிறந்தவனாகத் திகழ்ந்தவன். கங்கை கொண்ட சோழ புரம் கோயிலில் சுந்தரபாண்டியன் சந்தி என்ற வழிபாடு இவன் பெயரால் நடைபெற்று வந்துள்ளது. அவனுக்குப் பின் வந்த விக்கிரம பாண்டியன் என்பவனும் இக்கோயிலில் வழிபாட்டுக்குத் தானமளித்துள்ளான். பின்னர் 1261-இல் மாறவர்மன் குலசேகரன் ஆட்சியின் கீழ் கங்கைகொண்ட சோழபுரம் வந்தது.

விஜயநகர மன்னர்களான மல்லிகார்ஜுனன், பிரபுடவிருபாட்சன் ஆகியோரது கல்வெட்டுகள் இக்கோயிலில் காணப்படுகின்றன. கிருஷ்ணதேவராயர் காலத்தில் கங்கைகொண்ட சோழபுரம் கோயில் புகழுடன் விளங்கியிருக்கிறது. சோழமண்டலத்தில் பல கோயில் களுக்குச் சூலவரி போன்ற பல வரிகளிலிருந்து கிடைத்த பொருட் களைக் கிருஷ்ணதேவராயர் தானமாகக் கொடுத்தார். அவ்வாறு இவர் காலத்து வரிவசூலைத் தானம் பெற்ற கோயில்களில் கங்கை கொண்ட சோழீச்சுரமும் ஒன்றாகும்.

17-ஆம் நூற்றாண்டில் பாளையக்காரர்கள் உடையார்பாளை யத்தை ஆட்சி செய்து வந்தனர். இவர்கள் ஆட்சியின் கீழும் கங்கை கொண்டசோழபுரம் சிறந்து விளங்கியது. இக்கோயிலுக்குப் பல திருப்பணிகளும், சிறப்பான வழிபாடுகளும் செவ்வனே செய்து இக் கோயிலைப் போற்றி வந்ததற்கானச் சான்றுகள் உள்ளன.

கி.பி. 1756-இல் பிரெஞ்சுக்காரர்கள் உடையார்பாளையத்தின் மீது படையெடுத்தார்கள். 40,000 ரூபாய் திறை செலுத்தப் பாளை யக்காரர்கள் வற்புறுத்தப்பட்டார்கள். கி.பி. 1765-இல் ஆங்கிலேயர் களுடைய உதவியோடு நவாப் இவ்வூரைக் கைப்பற்றினார். இப் போரில் கங்கைகொண்டசோழபுரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. கி.பி. 1801-இல் கிழக்கிந்திய கம்பெனியார்க்குத் திருச்சிராப்பள்ளிச் சீமை சொந்தமானது. அப்போது கங்கைகொண்டசோழபுரமும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டது.

## கங்கைகொண்ட சோழீச்சுரம்

முதலாம் இராசேந்திரசோழன் தமது கங்கை வெற்றியின் நினைவாகக் கங்கை கொண்ட சோழபுரத்தை நிறுவி அங்கு 'கங்கைகொண்ட சோழீச்சுரம்' என்ற கோயிலையும் எடுப்பித்தான் எனக் கண்டோம். இக்கோயிலை இராசேந்திர சோழன் கட்டியிருப்பினும் அவனுடைய கல்வெட்டுக்கள் ஏதும் இக்கோயிலில் இல்லை. இராசேந்திர சோழனின் மூன்றாவது மகன் வீரராசேந்திரனது கல்வெட்டு தான் இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களிலேயே தொன்மையானது. இக்கல்வெட்டு வீரராஜேந்திரனின் கல்வெட்டான போதிலும் முதல் இராசேந்திரன், முதல் இராஜாதிராஜன், ஆகியோரின் ஆணைகளையும் குறிப்பிட்டுக் கூறுகின்றது. இராசேந்திர சோழன் 23-ஆவது ஆட்சி ஆண்டில் கொடுத்த தானங்களையும், இராஜாதிராஜன் தனது 26, 30-ஆம் ஆண்டுகளில் கொடுத்த தானங்களையும் இது குறிக்கிறது. ஆதலால் இக்கோயில் இராசேந்திர சோழனின் 23-ஆவது ஆட்சி ஆண்டுக்கு (கி.பி. 1035) முன்னர் கட்டப்பட்டது என்பதை ஊகிக்க முடிகிறது. அண்மையில் தென் ஆர்க்காடு மாவட்டம் எசாலம் என்ற ஊரில் இராமனாதேசுவரர் கோயிலில் திருப்பணி செய்யும்போது பூமிக்கடியிலிருந்து முதலாம் இராசேந்திர சோழனது செப்பேடு ஒன்று கிடைத்தது. இது இராசேந்திர சோழனின் 24-ஆம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்டதாகும். இச்செப்பேட்டின் வடமொழிப் பகுதியில் முதலாம் இராசேந்திரனுக்குரிய அருஞ்செயலாகக் கங்கைகொண்ட சோழீச்சுரம் கட்டிய செயல் குறிப்பிடப்படுகின்றது. எனவே கங்கை கொண்ட சோழபுரக் கோயில்வரலாற்றில் எசாலம் செப்பேடு சிறப்பிடம் பெறுகிறது. இராசேந்திர சோழன் இக்கோயிலைக் கட்டினான் என்பதற்கு இது முக்கியச் சான்றாகிறது.

### கட்டடக் கலை

தஞ்சைக் கோயிலின் விமானம் கீழிருந்து உச்சி வரை சதுர வடிவாகக் காட்சி தரும். ஆனால் கங்கைகொண்ட சோழபுர கோயிலின் விமானம் கீழே சதுரமாகவும், இடையில் எட்டு பட்டையாகவும், உச்சியில் வட்ட வடிவமாகவும் சிவலிங்க வடிவாகவே காட்சி அளிக்கும் பெருமை உடையது. தஞ்சை விமானத்தைப் போன்று அல்லாமல் இக்கோயில் விமானம் சற்றே உட்புறமாக வளைந்து பெண்மையின் நளினத்துடன் காட்சி அளிக்கிறது என்றால் மிகையில்லை. தஞ்சை கோயிலில் கட்டடக் கலையின்

சிறப்பில் அங்குள்ள சிற்பங்களின் அழகு நம் கருத்தைக் கவராமல் போய்விட்டது. ஆனால் கங்கை கொண்ட சோழபுரக் கோயிலின் சிற்பங்கள் தனிச் சிறப்புடன் கட்டடத்திலிருந்து வெளிப்பட்டுத் தனித்தன்மையுடன் காட்சி அளிக்கின்றன.

கோயில், •கருவறை, முன் மண்டபம் என்ற அமைப்புடன் விளங்குகிறது. விமானத்திற்கு முன்னர் உள்ள மண்டபம் இரண்டு அடுக்கு உள்ள மிகப்பெரிய மண்டபமாக திகழ்ந்திருத்தல் வேண்டும். முன் மண்டப வாயிலில் மற்றும் இடை நாழியின் வாயிலில் நிற்கும் வாயிற் காவலர்களின் சிற்பங்கள் தஞ்சைக் கோயிலில் இருப்பது போன்றே மிகவும் பெரிய வடிவம் கொண்டவையாகும்.

இக்கோயிலின் திருச்சுற்று மாளிகை இரண்டு தளங்களை உடையதாக இருந்திருக்கிறது. தற்பொழுது சில இடங்களில் மட்டுமே இத்தகைய அமைப்பு காணப்படுகிறது.

கங்கைகொண்ட சோழீச்சுரத்தின் வடபுறத்திலும் தென்புறத்திலும் சிறு சிறு கோயில்கள் உள்ளன. இவ்வை வடகயிலாயம், தென்கயிலாயம் என்று வழங்கப்பெறுகின்றன. வடகயிலாயம் பெரிய நாயகி அம்மன் சன்னதியாகத் திகழ்கிறது.

கி. பி. 1755 முதல் 1801 வரை பிரெஞ்சுக்காரர்கள், நவாப், ஆங்கிலேயர் ஆகியோரின் ஆதிக்கப் போராட்டத்தின் போது இக் கோயிலும் நகரமும் படைத்தளமாகியது. கோயிலின் வெளிப் புறத்தில் காணப்படும் கோட்டை மதில் இக்காலத்தில் கட்டப் பட்டிருக்கலாம்.

கோயிலின் கிழக்குப் பகுதியில் உள்ள கோபுரம் முழுமையாக இல்லை. 1836-இல் கொள்ளிடம் ஆற்றின் கீழ் அணை கட்டுவதற் காக இக்கோயிலிலிருந்து திருச்சுற்று மாளிகைப் பகுதி கற்களெல் லாம் எடுத்துச் செல்லப்பட்டன. இதைப் பற்றிய குறிப்பு 1855-ஆம் ஆண்டின் இந்தியன் ஆண்டிக்வரி என்ற நூலில் காணப்படுகிறது.

## சிற்பங்கள்

கருவறையின் தேவகோட்டங்களில் நடனமிடும் கணபதி, தட்சிணாமூர்த்தி, அரியரன், ஆடவல்லான், கங்காதரர், லிங்கோத் பவர், திருமால், சுப்ரமணியர், காலாந்தகர், துர்க்கை, பிரம்மா,

பைரவர், காமதகனர், சண்டேச அனுக்கிரகமூர்த்தி, கலைமகள் ஆகிய தெய்வத் திருவுருவங்களைக் கண்டு மகிழலாம். இதில் ஆடவல்லான் சிற்பம் மிகவும் அற்புத வடிவமுடையது. சோழ மன்னர்களின் குலநாயகம் ஆடவல்லான் ஆயிற்றே! ஆனந்தத் தாண்டவம் ஆடும் ஆடவல்லான் அருகிலே உமை அன்னை நந்தி யின் மேல் கையை ஊன்றி இறைவனின் தாண்டவத்தைக் கண்டு லயித்து நிற்கிறார். மறுபக்கம் குடமுழா வாசிக்கும் நந்தியின் உருவம். ஆடவல்லான் காலடியிலே சிவ கணங்கள். அவை மட்டுமா! எலும்பும் தோலுமாய்ப் பக்தியே உருவாகக் காரைக்கால் அம்மையார் தாளம் இடும் காட்சியைக் கண்டு போற்றாதவர்கள் யாருமே இருக்க முடியாது. "நீ ஆடும் போது உன்னடியின் கீழ் இருக்க வேண்டும்" என இறைவனை வேண்டுகிறார் எனச் சேக்கிழார் பெருமான் காரைக்கால் அம்மையாரின் வரலாற்றிலே கூறுகிறார். இலக்கியம் உயிர் பெற்று விளங்குவதை இச்சிற்பத்திலே காணலாம்.

வடக்குப் பக்கத்தில் சண்டேசுர அனுக்கிரகமூர்த்தி சிற்பம் அழகு செய்கிறது. சிவபெருமான் உமையுடன் அமர்ந்திருக்கிறார். அவரது காலடியில் கரம் கூப்பி வணங்கிய நிலையில் அமர்ந்துள்ள சண்டிகேசுவரர். சிவபெருமான் ஆசையோடும், மகிழ்ச்சியோடும் சண்டிகேசுவரர்க்குக் கொன்றை மாலையைச் சூட்டுகிறார். உமை யன்னை பெருமிதத்தோடு அக்காட்சியைக் காணும் கோலம் அற்புதமானது. இங்குள்ள சண்டிகேசுவரரை இராசேந்திரனே தன்னை உருவகம் செய்து கொண்டு அமைத்திருப்பானோ எனப் பல அறிஞர்கள் நினைக்கின்றனர். தமிழகத்தில் இத்தகைய கலை அழகு வாய்ந்த சிற்பம் இக்கோயிலில் மட்டும்தான் உள்ளது. இச்சிற்பத்தின் எதிரே காணப்படும் ஞான சரசுவதியின் சிற்பமும் மிக அழகு வாய்ந்தது.

கங்கை கொண்ட சோழபுரக் கோயிலில் உள்ள சிற்பங்களில் சில சோழ மன்னர்களின் வெற்றியின்போது கொண்டு வரப்பட்டு இங்கே வழிபடப் பெறுகின்றன. சிம்மக்கேணிக்கு அருகில் உள்ள மகிஷாசுரமர்த்தினி, நவக்கிரகம் என்று வணங்கப்பெறும் சூரிய பீடம், துர்க்கை ஆகியவை சாளுக்கிய நாட்டைச் சேர்ந்தவை. கருவறைக்குள் நுழையும் இடத்தில் உள்ள கலைமகள் பாலர் கலைப் பாணியைச் சேர்ந்தது. இவையன்றிக் கங்கை கொண்ட சோழ புரத்தைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் சாளுக்கிய, கலிங்கநாட்டுச் சிற்பங்கள் வழிபாட்டில் உள்ளன.

### செப்புத்திருமேனிகள்

இத்திருக்கோயிலில் இராசேந்திர சோழனால் வழிபடப் பெற்ற முருகன், சோமாஸ்கந்தர், அதிகாரநந்தி போன்ற கலைநயமிக்க செப்புத்திருமேனிகள் வழிபாட்டில் உள்ளன.

### சோழகங்கம்

கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து மேற்கே செயங்கொண்டம் செல்லும் சாலையில் சுமார் 2 கி.மீ. தொலைவில் ஒரு பெரிய ஏரியைக் காணலாம். தற்போது இவ்வேரி 'பொன்னேரி' என அழைக்கப்படுகிறது. இராசேந்திர சோழன் தான் வெற்றி கொண்ட அரசர்களின் தலையில் கங்கை ஆற்றின் நீரை எடுத்து வரச் செய்து அதை இங்கு சோழகங்கம் என்று ஜயஸ்தம்பமாகச் (வெற்றித்தூண்) செய்வித்தான் எனத் திருவாலங்காடு செப்பேடு கூறுகிறது.

## கங்கை கொண்ட சோழபுரம்

### ஊரும் மாளிகையும்

சோழமன்னர்கள் வாழ்ந்த ஊர் மற்றும் மாளிகை எவ்வாறு இருந்திருக்க வேண்டும் என்பதை அறிந்து கொள்ள-கங்கை கொண்ட சோழபுர நகரைப் பற்றி அறிந்து கொள்ள இலக்கியங்களும், கல்வெட்டுக்களும் துணைபுரிகின்றன.

கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றி மதிற்சுவர்கள் இருந்திருக்கின்றன. கலிங்கத்துப்பரணியில் "கங்காபுரியின் மதிற் புறத்துக் கருதார் சிரம்போய் மிகவீழ" என்று கூறப்படுகிறது. ஒட்டக் கூத்தர் இயற்றிய மூவருலாவில் இந்நகரைப் பற்றி கூறப் பட்டுள்ளது.

— வாயிலும்,
மாளிகையும் சாலையும், ஆலயமும், மண்டபமும்,
சூளிகையும் எம்மருங்குந் தோரணமும் - சாளரமுந்
தெற்றியும் மாடமும், ஆடரங்கும் செய்குன்றும்
சுற்றிய பாங்கரும் தோன்றாமே.

— (இராசராச சோழனுலா 158-162)

ஊரைச்சுற்றி இரண்டு கோட்டை மதில்களாவது இருந்திருக்க வேண்டும். 'இராசேந்திர சோழன் மதில்', 'உள் படை வீட்டு மதில்' என்ற பெயர்கள் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றன.

குலோத்துங்கச் சோழன் காலக் கல்வெட்டில் 'குலோத்துங்கச் சோழன் திருமதில்' என்ற பெயரும், 'குலோத்துங்கச் சோழன் திருமதில் பெருவழி' என்ற ஒரு தெருவின் பெயரும் குறிப்பிடப் படுகின்றன.

இவ்வூரில் பல வழிகள் இருந்திருக்கின்றன. அவைகளுக்குப் பெயர்களும் இடப்பட்டிருந்தன. இராஜராஜன் பெருவழி, இராசேந் திரன் பெருவழி, விலாங்குடையான் பெருவழி, கூழையானை போன பெருவழி என்ற பெயருடைய வழிகளின் பெயர்கள் கல்வெட்டுக் களில் காணப்படுகின்றன. குலோத்துங்கச் சோழன் கல்வெட்டு 'தரணி சிந்தாமணி பெருந்தெரு' என்ற ஒரு தெருவின் பெயரைக் குறிப்பிடுகிறது இரண்டாம் இராசேந்திரன் கல்வெட்டில் கங்கை கொண்ட சோழபுரத்து உள்ளாலை பெரிய அங்காடி, திருபுவன மாதேவிப் பேரங்காடி என்ற இரு அங்காடிகள் குறிப்பிடப்படு கின்றன.

வேம்புகுடிவாசல் என்ற ஒரு வாயில் ஊரின் தெற்குப்புறத்தில் இருந்ததாக அறியப்படுகிறது. இன்றும் வேம்புக்குடி என்ற ஊர் கங்கைகொண்டசோழபுரம் அருகே உள்ளது.

## மாளிகை

சோழ மன்னர்களில் பெரும்பாலானோர் கங்கை கொண்ட சோழபுரத்து மாளிகையில் இருந்து கொண்டு ஆட்சி செய்திருக் கின்றனர். அம்மாளிகையைப் பற்றி கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது.

'வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து
மண் குளிரச் சாயல் வளர்க்குமாந் - தண்கவிகை
கொங்கா ரலங்க லனபாயன் கொய் பொழில்சூழ்
கங்கா புரமா ளிகை'

என்ற தண்டியலங்காரப் பாடல் கங்கை கொண்ட சோழபுர மாளிகையைச் சிறப்பித்துக் கூறுகிறது.

வீர ராசேந்திரனுடைய கல்வெட்டில் இங்கிருந்த அரண்மனை யின் பெயர் 'சோழ கேரளன் திருமாளிகை' என அழைக்கப்படுகிறது.

சோழகேரளன் என்பது இராசேந்திர சோழனுடைய பட்டப் பெயர்களில் ஒன்றாகும். முதற்குலோத்துங்கச் சோழனுடைய கல்வெட்டு ஒன்று இங்கிருந்த மாளிகையைக் 'கங்கை கொண்ட சோழன் மாளிகை' எனக் குறிக்கிறது. மாளிகை வெவ்வேறு மன்னர்கள் காலத்தில் மாற்றி அமைக்கப்பட்டு வெவ்வேறு பெயரால் அழைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மாளிகைமேடு எனக் கூறப்படும் இடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் வெளிப்படுத்தப்பட்ட கட்டடங்களில் வெவ்வேறு காலக் கட்டடப் பகுதிகள் காணப்படுவதி லிருந்தும் முதலில் இருந்த மாளிகை பிற்காலத்தில் மாற்றிக் கட்டப் பட்டது என்பது உறுதியாகிறது.

மாளிகையின் பகுதிகளைப் பற்றியும் சில கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. ஒரு கல்வெட்டில் ஆதிபூமி, கீழைச் சோபானம், மாவலிவாணாதராஜன் பள்ளிக்கட்டில் போன்ற பகுதிகள் குறிப்பிடப் படுகின்றன. வேறு ஊர்களில் உள்ள கல்வெட்டுக்களிலும் மாளிகையைப் பற்றிக் கூறப்படுவதைக் காணலாம். இராஜாதி ராஜனுடைய கல்வெட்டு ஒன்றில் அவன் கங்கைகொண்ட சோழ புரம் அரண்மனையில் 'வெளிமேல் மண்டபம்' என்ற இடத்தில் 'பல்லவராயன்' என்ற இருக்கையின் மீது உட்கார்ந்திருந்த பொழுது சர்வதீர்த்த உடையார் என்ற இறைவனுக்கு இறையிலி யாக நிலம் அளித்த செய்தி கூறப்படுகிறது. இதே மன்னன் இம்மாளிகையில் இருந்து கொண்டு திருவெண்காடு தலத்தில் உள்ள அர்த்தநாரி இறைவனுக்கு நிலம் தானமாக அளித்த செய்தி மற்றொரு கல்வெட்டால் தெரியவருகிறது.

## கங்கைகொண்டசோழபுரத்தைச் சேர்ந்தோர்

கங்கைகொண்டசோழபுரத்து உடையான் செய்யபாதம் என்பவன் திருவாரூர்க் கோயிலில் உடையார் வீதிவிடங்கத் தேவர் நம்பிராட்டியார்க்கு ஒரு இரத்தின ஆரம் செய்தளித்ததாக இரண் டாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டால் அறியமுடிகிறது.

நன்னிலம் வட்டம் சேங்காலிபுரத்தில் துந்துபீசுவர சுவாமி கோயில் உள்ளது. அக்கோயிலைக் கற்றளியாகச் செய்தவன் கங்கை கொண்டசோழபுரத்தைச் சேர்ந்த சாலிகன் கௌதமன் ஆவான். அக்கோயிலின் சுவரில் கூப்பிய கரத்துடன் இவனது உருவமும் அவ் வுருவத்திற்கு மேலே 'ஸ்வஸ்திஸ்ரீ இக்கோயில் திருக்கற்றளித் திருப்

பணி செய்வித்தான் கங்கைகொண்ட சோழபுரத்து முடிகொண்ட சோழப் பெருந் தெருவில் இருக்கும் சாலிகன் கௌதமன் தில்லைவன முடையான் அரியான்' என்று கல்வெட்டும் காணப்படுகிறது. சீர்காழிக் கோயிலில் உள்ள கல்வெட்டு இவ்வூரைச் சேர்ந்த வாமமாளிகை உடையான் வேம்பன் வைபிரியார் மகன் ஆரம்பூண்டான் என்பவனைப் பற்றிக் கூறுகிறது. கங்கைகொண்டசோழபுரத்து அரண்மனையில் திருமஞ்சனம் ஆட்டும் பணிமகளிரில் ஒருத்தி நாட்டானம் என்னும் பெயருடையாள் பொன் தானமளித்துள்ளாள் எனச் சிவபுரிக் கோயில் கல்வெட்டு கூறுகிறது. எனவே கங்கைகொண்ட சோழபுரத்தைச் சார்ந்தோர் பல்வேறு கோயில்களுக்கும் சென்று தானங்கள் அளித்துள்ளனர் என அறிகிறோம்.

# கங்கை கொண்ட சோழபுரம் அகழாய்வு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையால் 1980, 1981, 1985, 1987, 1990-91 ஆண்டுகளில் கங்கை கொண்ட சோழ புரம் பகுதியில் மாளிகைமேடு (உட்கோட்டை), மண்மலை, குருவாலப்பர் கோயில் கோட்டைச்சுவர், கல்குளம், பொன்னேரி மதகு ஆகிய வெவ்வேறு இடங்களில் இத்துறையின் முன்னாள் இயக்குநர் டாக்டர். நாகசாமி, தற்போதைய இயக்குநர் திரு. நடன காசிநாதன் ஆகியோரின் வழிகாட்டலின்படி அகழாய்வு மேற்கொள்ளப் பட்டது. இதிலிருந்து கிடைத்த தொன்மையான கலைப் பொருட்கள், சீன நாட்டுப் பானை ஓடுகள், கட்டடப்பகுதிகள் ஆகியவை கங்கை கொண்ட சோழபுரத்தின் பண்டைச் சிறப்பு நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

## மாளிகைமேடு

கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து தென்மேற்கே சுமார் 3 கி.மீ. தொலைவில் குருவாலப்பர் கோயிலிலிருந்து உட்கோட்டை செல்லும் வழியில் உள்ள மேட்டுப்பகுதி மாளிகைமேடு என அழைக்கப்படுகிறது.

இங்கு நடந்த அகழாய்வில் சோழர்காலக் கட்டடப்பகுதிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கட்டடங்களின் பெரும்பாலான பகுதிகள் தொடர்ச்சியாக இல்லை. ஏனெனில் இப்பகுதியில் முன்பு செங்கற்களை மக்கள் தோண்டியெடுத்ததனால் கட்டடப்பகுதிகள் சிதைக்கப்பட்டுவிட்டன. எனினும் கிடைத்துள்ள கட்டடப்பகுதிகளைக் கொண்டு சோழர் கால அரண்மனை எவ்வாறு கட்டப் பட்டிருக்க வேண்டும் என்பதை ஊகிக்க முடிகிறது.

இங்குக் காணப்படும் சுவர்கள் ஒன்றையடுத்து ஒன்று 55 செ.மீ. இடைவெளியில் இணையாகத் தொடர்ந்து செல்கின்றன. சுவரின் கீழ்ப்பகுதி 1·35 செ.மீ. அகலமும் மேற்பகுதி 1·10 செ மீ. அகலமும் உடையதாக விளங்குகின்றன. கட்டடத்தின் கூரைப்பகுதியைத் தாங்குவதற்கு மரத்தூண்கள் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும் என்ப

தற்குச் சான்றாக கருங்கல் பீடங்கள் கட்டடப் பகுதியில் புதைத்து வைத்துக் கட்டப்பட்டுள்ளன. சதுர வடிவில் இக்கற்கள் உள்ளன. நடுவில் சிறு பள்ளம் காணப்படுகிறது. இதுவரை முப்பதுக்கும் மேற்பட்ட இத்தகைய கருங்கற்கள் வெளிக் கொணரப்பட்டுள்ளன. ஒரு இடத்தில் இரு கற்கள் பதித்த நிலையில் ஒரு செங்கற் சுவர் வெளிக் கொணரப்பட்டது. இரு கற்களுக்கும் இடையில் காணப்படும் தூரம் 2·00 மீட்டர் உள்ளது. சுமார் 500 ச.மீ. பரப்பளவில் இது வரை அகழாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பரப்பளவில் 30 க்கும் மேற்பட்ட தூண்கள் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. எனவே தற்போது வெளிப்படுத்தப்பட்டப் பகுதி மரத்தூண்கள் நிரம்பிய மண்டபமாக அல்லது அரண்மனைப் பகுதியாக இருக்க வேண்டும். இப்பகுதியில் கிடைத்த அதிக அளவிலான இரும்பு ஆணிகளும் இதனை உறுதி செய்கின்றன.

இங்குக் கிடைத்துள்ள கட்டடப் பகுதி சுட்ட செங்கற்களால் நன்கு வரிசையாக அடுக்கப்பட்டு முறையாகக் கட்டப்பட்டுள்ளது. அகழாய்வுக் குழியின் வடகிழக்குத் திசையில் உள்ள ஒரு சுவரின் இரு புறங்களிலும் பெருக்கல் குறியீடுகள் காணப்படுகின்றன. இதன் மூலம் அக்காலத்தில் அளவுக்காகக் குறியிட்டுக் கட்டடச் சுவர் எழுப்பும் முறை நடைமுறையில் இருந்தது என்பதை உணர முடிகிறது.

மாளிகை மேட்டுப் பகுதியில் தொடர்ந்து அகழாய்வு மேற்கொள்ளப்பட்டு ஆறு அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. ஆறு அகழாய்வுக் குழிகளிலும் இயற்கை மண் வரையிலும் ஆய்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது. இயற்கை மண் (Natural Soil) 3·50 மீட்டர் ஆழத்தில் தென்பட்டது. முதற்குழியில் மூன்று வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த கட்டடப்பகுதிகள் காணப்படுகின்றன.

### மண்மலை

கங்கைகொண்ட சோழபுரம் - அணைக்கரை சாலையில் சுமார் 3 கி.மீ. தொலைவில் சாலையின் அருகே மண்மலை என்ற கிராமம் உள்ளது. இவ்வூரில் சிறிய மண்மேடு ஒன்று காணப்படுகிறது. இந்த இடத்தின் வரலாற்றுத் தொன்மையினை அறிந்து கொள்வதற்காக இரு அகழாய்வுக் குழிகள் தோண்டப்பட்டன. முதற்குழியில் 3·90 மீட்டர் ஆழத்தில் செங்கற்கள் பாவப்பட்டது போன்ற

அமைப்பு காணப்பட்டது. இது கட்டடத்தின் ஒரு பகுதியாக இருக்கக் கூடும். இது போன்ற கட்டடப்பகுதி மற்றொரு குழியில் 2·70 மீ. ஆழத்திலும் காணப்பட்டது.

இங்கு காணப்பட்ட கட்டடப்பகுதியை காணும் பொழுது இங்கும் ஒரு உயர்ந்த கட்டடம் இருந்திருக்க வேண்டும் எனக் கருத முடிகிறது. இங்குள்ள சுவரின் அகலம் 1.10 மீட்டர். இது மாளிகைமேடு அகழாய்வில் காணப்பட்ட சுவரின் அளவே உள்ளது. எனவே மண்மலை, மாளிகைமேடு சுவர்கள் ஒரே காலத்தவை என்பதும், கங்கைகொண்ட சோழபுரம் நகர் மண்மலை வரை (தற்போது மாளிகை மேட்டிலிருந்து 3 கி.மீ. தூரம்) விரிவடைந்திருந்தது என்பதையும் உணர முடிகிறது.

## கோட்டைச் சுவர் (குருவாலப்பர் கோயில்)

கங்கைகொண்ட சோழபுரம் நகரைச் சுற்றி கோட்டைச்சுவர் அமைந்திருக்க வேண்டும்.

குருவாலப்பர் கோயிலிருந்து உட்கோட்டை செல்லும் சாலையின் துவக்கத்தில் இடது புறத்தில் காணப்படும் வயல்களுக்கு அருகில் நீளமான மேடு காணப்படுகிறது. இதனை ஊர் மக்கள் அகழிமேடு என அழைக்கின்றனர். இப்பகுதியைப் பற்றியும் அறிந்து கொள்ள அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது. இங்கு அகழாய்வில் 50 செ.மீ. ஆழத்தில் செம்புரான் கற்கள் எனப்படும் (Laterite) ஒரு வகைக் கற்களைச் சீராக அடுக்கிக் கட்டிய சுவர் அமைப்பு ஒன்று காணப்பட்டது. கிழக்கு மேற்காக இச்சுவர் அமைப்புத் தொடர்ந்து செல்கிறது. இது சோழர் காலத்தில் கட்டப்பட்ட கோட்டை மதிற்சுவராக இருத்தல் வேண்டும். சோழர் கல்வெட்டுக்களில் 'இராசேந்திரசோழன் மதில்' 'உட்படைவீட்டு மதில்' என்ற கோட்டைச் சுவர்களின் பெயர்கள் குறிக்கப்படுவதைக் காண்டோம். கங்கை கொண்ட சோழபுரம் நகரைச் சுற்றி இம்மதிற்சுவர் இருந்திருக்க வேண்டும்.

## கல்குளம்

மாளிகைமேடு எனப்படும் இடத்தின் அருகே குளம் ஒன்று உள்ளது. இதனைக் கல்குளம் என மக்கள் அழைக்கின்றனர். இக்குளத்தின் வடக்குப்பக்கத்தில் அகழாய்வுக்குழி இடப்பட்டது. 2 மீட்டர் ஆழத்தில் கருங்கற்களைக் கொண்டு அமைத்த கால்வாய் ஒன்று காணப்பட்டது. கால்வாயின் மேற்பகுதியும் 71 × 30 × 25 செ.மீ. அளவுள்ள கற்களால் மூடப்பட்டுக் காணப்பட்டது.

கால்வாயின் அகலம் 54 செ.மீ. ஆழம் 41 செ.மீ. ஆகும். நீர் பக்க வாட்டில் கசிவு இல்லாமல் இருப்பதற்காகவும் வலிமைக்காகவும் இருபக்கங்களிலும் செம்புராங் கற்களும் களிமண்ணும் குழைத்துக் கட்டப்பட்டுள்ளது. தண்ணீர் வரும் வழி முழுவதும் கருங்கற்களால் பாவப்பட்டும், அக்கால்வாயின் மேற்பகுதி கற்களால் மூடப்பட்டும் காணப்படுவதாலும் மாளிகைமேடு அருகே இக்குளம் காணப்படுவதாலும் இக்குளத்தினைச் சோழர் காலத்தில் அரச குடும்பத்தினர் பயன்படுத்தியிருக்க வேண்டும் என ஊகிக்க முடிகிறது.

## பொன்னேரி மதகு

முதலாம் இராசேந்திரன் சோழன் கட்டிய ஏரி சோழகங்கம் என அழைக்கப்பட்டுத் தற்பொழுது பொன்னேரி என அழைக்கப் படுகிறது. இவ்வேரி கங்கைகொண்ட சோழபுரத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் ஜெயங்கொண்டம் செல்லும் சாலையில் உள்ளது. இவ்வேரியின் கிழக்குப்பக்கத்தில் காணப்படும் மதகுக்கு அருகில், பண்டைய மதகு அமைப்பினை அறியும் வகையில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்டது.

சோழர் காலத்தில் மதகு செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. செங்கற்களைக் கட்டுவதற்குக் களிமண் கலவையைப் பயன்படுத்தி யிருக்கிறார்கள். கருங்கற் பலகைகள் அடிப்பகுதியில் பாவப் பட்டுள்ளது. ஏரியில் இருந்து சிறு துவாரத்தின் மூலம் தொட்டி போன்ற ஒரு பகுதியில் தண்ணீர் தேங்கி, பிறகு தொட்டி நிரம்பிய வுடன் தண்ணீர் வடிகால் மூலம் வெளியேற்றப்பட்டுள்ளது. மதகி லிருந்து தண்ணீர் வெளியேறும் வழி பிறை சந்திரன் போல வளைத்துக் கட்டப்பட்டுள்ளது. மதகிருந்த இடத்தில் 2.60 மீ. ஆழம் வரை தோண்டப்பட்டது. கருங்கற்களால் கட்டப்பட்ட தொட்டியின் நீளம் 3 60 மீ. அகலம் 80 செ.மீ. ஆகும். அகழாய்வுக் குழியின் மண் அடுக்குகளைப் பார்க்கும் பொழுது சோழர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடப்பகுதிக்கு மேல் வண்டல் படிந்து விட்டதால் அது பயன்படாமல் போய்விட, மதகின் மேலேயே அண்மைக் காலத்தில் மீண்டும் மதகினைக் கட்டியுள்ளனர் எனவும் அறிகிறோம்.

சோழர் காலத்தில் ஏரியின் அடித்தள ஆழம் இன்னும் அதிகமாக இருந்திருக்க வேண்டும் என்பதும் தெரிகிறது. சோழர் கால மதகின் கட்டட அமைப்பையும், கட்டுமான முறையினையும் இவ்வகழாய்வு உணர்த்துகின்றது.

மேற்கண்ட இடங்களைத் தவிர மாளிகை மேட்டிற்கு அருகிலுள்ள கீழ் மாளிகைமேடு, மாளிகைமேடு புறம் போக்கு நிலத்திலும் மாதிரி அகழாய்வுகள் செய்யப்பட்டன.

கங்கைகொண்ட சோழபுரம் அகழாய்வில் பல தொன்மையான கலைப்பொருட்கள் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு பண்டைய சோழர் கால அரண்மனை எவ்வாறிருந்தது என்பதைப் பற்றியும், சோழர் காலக் கலை, மற்றும் நாகரிகச் சிறப்பினையும் அறிந்து கொள்ளலாம்.

## இரும்புப்பொருட்கள்

மாளிகைமேட்டு அகழாய்வில் அதிக அளவில் இரும்பு ஆணிகளும், பிடிப்பு ஆணிகளும் (clamps) கிடைத்துள்ளன. இரும்பு ஆணிகள் 3 செ.மீ. நீளம் முதல் 24 செ.மீ. நீளம் வரை கிடைத்திருக்கின்றன. இவ்வாறு அதிக அளவில் இரும்பு ஆணிகள் கிடைப்பதால் அரண்மனையின் கூரைப்பகுதி மரத்தினால் அமைக்கப்பட்டு ஓடு வேயப்பட்டிருக்கலாம் என்பதை ஊகிக்க முடிகிறது.

## தந்தப்பொருட்கள்

அரசர், அரசியர் வசிக்கும் மாளிகைப்பகுதியில் விலையுயர்ந்த பொருட்களினால் மாளிகையை அலங்கரிப்பது வழக்கம். அங்கிருந்த இருக்கைகளைத் தந்தத்தினாலும், ஓவியங்களினாலும் பல உருவங்களை அமைத்து அழகு செய்தனர் என இலக்கியங்கள் கூறுகின்றன. இங்குக் கிடைத்த தந்தப்பொருட்கள் இவ்விலக்கியங்கள் கூறும் வருணனைகளை உண்மையாக்குகின்றன. இவ்வகழ்வாய்வில் தந்தத்தினால் செய்யப்பட்ட யாளி, யானை போன்ற உருவங்கள் கிடைத்துள்ளன. மரத்தில் இவை பொருத்தப் பட்டிருந்தன என்பதைத் தெரிந்து கொள்ளும் வகையில் ஒரு ஆணி பொருத்தப்பட்ட நிலையிலும் கிடைத்துள்ளன.

## பிறபொருட்கள்

வட்ட வடிவமான அலங்கார வேலைப்பாடு செய்யப்பட்ட கல்லால் ஆன தட்டுப் போன்ற பொருட்கள் கிடைத்துள்ளன. இவற்றில் பெரும்பாலும் விரிந்த தாமரை இதழ் போன்ற அமைப்பு செதுக்கப்பட்டுள்ளது. இத்தகைய தட்டுகள் மணற்கல்லால் (sand stone) செய்யப்பட்டவை. இவை வழிபாட்டுக்கு உரிய

பொருட்களை வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இதைத் தவிர படிகக்கற்களால் செய்யப்பட்ட மணிகள், சங்கு வளையல்கள் போன்றவையும் கிடைத்துள்ளன.

**வண்ணங்களுடன் கூடிய காரைத்துண்டுகள்**

ஆய்வின் போது கட்டடப்பகுதிகள் வெளிப்படுத்தப்பட்டன. கட்டடப் பகுதிகளுக்கு அருகில் சுண்ணாம்பு காரைத்துண்டுகள் அதிக அளவில் கிடைக்கின்றன. பச்சை, சிவப்பு, மஞ்சள் போன்ற வண்ணங்கள் இவற்றில் காணப்படுகின்றன. சிலவற்றில் வளைகோடுகளும் வரையப்பட்டுள்ளன. எனவே கட்டடப்பகுதிக்கு மேலே சுண்ணாம்பு பூசி வண்ணப்பூச்சு அளித்து அழகுபடுத்தியுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

**பானை ஓடுகள்**

இங்கு மத்தியகாலப் பானை ஓடுகள் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவைகளில் கனமான சிவப்பு நிறப் பானை ஓடுகள் அதிகம். சில பானைகளின் கழுத்துப் பகுதியில் அலங்கார வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு உடைந்த பானையின் கழுத்துப் பகுதியில் மீன் குறியீடு காணப்பட்டது. இதனை அடுத்துச் சீன தேசத்துப் பானை ஓடுகள் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவை 11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. சோழர் காலத்தில் தமிழகத்திற்கும் சீனத்திற்கும் இருந்த வணிகத் தொடர்பினை இவை எடுத்துக் காட்டுகின்றன.

தமிழகத்திலேயே பெரும்பரப்பளவில் அரண்மனைப் பகுதிகள் வெளிப்படுத்தப்பட்டிருப்பது கங்கை கொண்ட சோழபுரத்தில்தான். சோழர்கால கட்டடக்கலையையும், சோழ மன்னர்களின் சிறப்பினையும் அறிந்து கொள்ள இவ்வாய்வு பெரிதும் உதவி செய்கிறது.

# அகழ்வைப்பகம்

கங்கைகொண்ட சோழபுரப் பகுதியில் நடைபெற்ற அகழாய்வில் கிடைத்த தொல்பொருட்கள் இங்கேயே காட்சிக்கு வைக்கப் பெற்றுள்ளன. கங்கைகொண்ட சோழபுரத்தின் வரலாற்றுச் சிறப்பினைப் பொதுமக்களும் மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் இங்கேயே அகழ்வைப்பகம் அமைக்கப்பட்டது. கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றியுள்ள ஊர்களிலிருந்து சேகரிக்கப் பட்ட சிற்பங்கள், கல்வெட்டுக்கள் முதலியனவும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இவை தவிர அரியலூர் வட்டத்தில் சேகரிக்கப் பட்ட சிற்பங்களும், பூமிக்கடியிலிருந்து கிடைத்த சோழர் காலச் செப்புப் பொருட்களும் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

### காட்சிப் பெட்டி - 1

மாளிகை மேடு அகழாய்வில் கிடைத்த மணற்கல்லால் ஆன பொருட்கள், காசு வார்ப்புகள், குறுவாள் பிடி, பிடிப்பு ஆணித் தகடுகள், சிறிய பிடிப்பு ஆணிகள், பல்வேறு அளவுள்ள இரும்பு ஆணிகள், சந்தனம் அரைக்கப் பயன்பட்ட கல், அலங்கரிக்கப் பட்ட கல்பொருட்கள் ஆகியன இதில் காட்சிக்காக வைக்கப் பட்டுள்ளன.

### காட்சிப் பெட்டி - 2

அகழாய்வில் கிடைத்த கூரை ஓடுகளும், அலங்கார வேலைப்பாடு செய்யப்பட்ட தந்தப் பொருட்களும், கற்பொருட்களும், மண்ணாலான கெண்டி மூக்குப் பகுதிகள், சிவப்புப்பானை ஓடுகள், சீன தேசத்துப் பானை ஓடுகள் ஆகியவை இதில் இடம் பெற்றுள்ளன.

### காட்சிப் பெட்டி - 3

சோழர் காலத்தைச் சேர்ந்த கோபுர வடிவம் போன்ற பூசை பாத்திரம் ஒன்று உள்ளது. செம்பினால் ஆனது. இரண்டு தளங்கள் உடையது. கீழ் தளத்தில் பக்கத்திற்கு ஒன்றாக நான்கு மூலைகளில் சிறிய நந்தி உருவங்களும் மேல் தளத்தில் பக்கத்திற்கு ஒன்றாக நான்கு மூலைகளில் நான்கு சிறிய சிவலிங்க உருவங்கள்

காணப்படுகின்றன. சிகரத்தில் மூன்று சிறிய கலசங்கள் உள்ளன. இதைத் தவிர கலசம், கெண்டி, முக்காலியில் வைக்கப்பட்ட விபூதிக் கலசம் ஆகியவையும் காட்சியில் உள்ளன. இவையனைத்தும் அரியலூர் வட்டம் கொட்டரை என்ற ஊரிலிருந்து கொண்டு வரப்பட்டவையாகும். இக்காட்சிப் பெட்டிக்குள் சிறிய புத்தர் சிற்பமும் காட்சியில் உள்ளது.

**காட்சிப் பெட்டி - 4**

சீனநாட்டுப் பானை ஓடுகள், பிடிப்பு ஆணிகள், இரும்பு ஆணிகள், சோழர் காலக் கண்ணாடித் துண்டுகள், சுடுமண் விளக்குகள், சுடுமண் பொருட்கள் முதலியன வைக்கப்பட்டுள்ளன.

**காட்சிப் பெட்டி - 5**

சோழர் கால வளையல் துண்டுகள், விலை உயர்ந்த கற்கள், மணிகள் வைக்கப்பட்டுள்ளன.

**காட்சிப் பெட்டி - 6**

ஓலைச்சுவடிகள், சோழர் மற்றும் நாயக்கர் காலச் செப்புக் காசுகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**காட்சிப் பலகை - 1**

மாளிகை மேட்டுப் பகுதியில் கிடைத்த பராந்தக சோழன் காலக் கல்வெட்டின் படி வைக்கப்பட்டுள்ளது.

**காட்சிப் பலகை - 2**

அரியலூர் ஜமீன்தார் அவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட போர்க் கருவிகளான இரும்புக் கத்திகள், வாள், மற்றும் திருச்சி மாவட்டம் உடையார் பாளையம் வட்டம் சின்ன வளையம் என்ற ஊரிலிருந்து பெற்ற கத்தி (111 × 3·5செமீ) ஆகியவை காட்சிக்கு உள்ளன. இவை 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இவை தவிர கத்தி, அரிவாள், பிச்சுவாக்கத்தி, சுமதாடு, கட்டாரி போன்ற போர் ஆயுதங்களும் காட்சியில் உள்ளன. அரியலூர்ப் பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்ட "பிரமாதீச வருடம் ஆனி மாதம் 14 வ ஆதுகுடுபள்ளச் சேரியிருக்கும் இருவாண்டி அம்மான் பெரிய கருப்புக்கு படவியாவரி மூப்பன் செய்த உபயம்" என்று பொறிக்கப் பட்ட அரிவாள் ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இவ்வரிவாளில் பொறிக்கப்பட்ட ஊர் 'ஆடுகுடு பள்ளச்சேரி' என அழைக்கப்படுகிறது.

அரியலூர் வட்டம் அரங்கோட்டையில் கிடைத்த செங்கற்கள் சில உள்ளன. இவற்றின் அளவுகள் 48 × 25 × 8 செ. மீ; 50 × 25 × 8 செ. மீ; இவை சோழர் காலத்தைச் சேர்ந்தவை.

இதைத் தவிர கங்கைகொண்ட சோழீச்சுரத்தின் பொதுத் தோற்றம், அங்குள்ள சிற்பங்கள் ஆகியவற்றின் நிழற்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

## கல்வெட்டுகள்

சோழர், பாண்டியர், நாயக்கர் காலக் கல்வெட்டுக்கள் மூன்று சேகரிக்கப்பட்டு, பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இம்மூன்று கல்வெட்டுகளும் தனித்தனிச் சிறப்புடையன ஆகும்.

### முதலாம் பராந்தகன் கல்வெட்டு

இக்கல்வெட்டு, திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் உட்கோட்டை என்னும் கிராமத்தில் கீழ்மாளிகைமேடு என்று வழங்கப்படும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டு, கங்கை கொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்திற்குக் கொண்டு வரப்பட்டு, பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

1. ஸ்வஸ்திஸ்ரீ மதிரைகொண்டகோ
2. ப்பரகேசரி வர்மர்க்கு யாண்டு
3. இருபத்தி யிரண்டாவது மதிணாயகஞ்செ
4. ய்கின்ற நாரண மங்கலமுடைய
5. யான் விண்ணப்பத்தினால் மூவே
6. ந்தப் பெருந்தச்சன் வாய் கேழ்வி
7. யில் தஞ்சாவூர் இருமடி சோ
8. ழப் பெருந்தெருவில் ஏறின வளஞ்
9. சியர் ஐநூற்றுவர்க்கு அருளிச்
10. செய்த அருளினால் பெற்ற பரிச
11. மாவது வெட்டியும் வேதனை
12. யும் இறையும் எச்சோறும் இ

13. றாததாக நிலைத்தளமும் பேட்டை
14. த்தாவளமும் இவகளேய் பெ(ற்)று
15. வதாகவும் . . . . எப்பேர்
16. பட்ட கோவும் புக்குந
17. லியிததாகவும் இப்பரிசு
18. எப்பேர்ப்பட்ட ஸ்ர்வபாகம்
19. சந்திராதித்தவர்க்கு அருளிச்
20. செய். . . . . . . .
21. . . . . . . . . .
22. . . . . . . . . . .

*கீழ் உள்ள சில வரிகள் சிதைந்துள்ளன. அத்துடன் கல்வெட்டும் முடிவடைந்து விடுகிறது.*

**கல்வெட்டுச் செய்திகள்**

*முதல் பராந்தக சோழனது இருபத்தியிரண்டாவது ஆட்சி யாண்டில் தஞ்சாவூர் இருமடி சோழப் பெருந்தெருவிற்கு வந்து குடியேறின வளஞ்சியர் ஐநூற்றுவர்க்கு இடம் வேண்டுமென்று மூவேந்தப் பெருந்தச்சன் என்பவன் நாரணமங்கல முடையான் என்னும் அரசனது மதிள் நாயகத்திடம் நேரிடையாகக் கூற அதனைக் கேட்ட மதிள் நாயகம் அரசனிடம் மனுச்செய்து கொள்ள அரசனும், அதற்கிசைந்து அவர்களுக்கு வசிப்பதற்குரிய இடத்தையும், வாணிகத் தொழில் செய்வதற்குரிய தொழிற்பேட்டையையும், வெட்டி, வேதனை, இறை எச்சோறு முதலாய வரி நீக்கிப் பரிசாக அளித்துள்ளான் என்ற செய்தி குறிக்கப்படுகிறது.*

*எனவே கங்கைகொண்ட சோழபுரத்திற்கு முதலாம் இராசேந்திர சோழன் தலைநகரை மாற்றுவதற்கு முன்பாகவே கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் கங்கைகொண்ட சோழபுரம் ஒரு சிறந்த நகராகவும் சிறந்த வாணிகத் தலமாகவும், இருந்திருக்கவேண்டும் என்பதும் இக்கல்வெட்டினால் உணர முடிகிறது.*

### சுந்தரபாண்டியன் கல்வெட்டு

திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம், செயங்கொண்ட சோழபுரத்தில் பேருந்து நிலையத்தின் அருகே மேற்குத் திசையில் அமைந்துள்ள தற்போது 'ஆவேரி' என்று அழைக்கப் படும் ஏரியில் இக்கல்வெட்டுத் தூண் புதையுண்டு நின்றிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ள தூணின் மூன்று பக்கங்களிலும் எழுத்துகள் பொறிக்கப் பட்டுள்ளன. கல்வெட்டின் மேலே மூன்று பக்கமும் விளக்கு உருவமும், உடுக்கை வடிவமும் பொறிக்கப்பட்டுள்ளது.

### கல்வெட்டு

| முதல் பக்கம் | | 2-ஆம் பக்கம் | | 3-ஆம் பக்கம் | |
|---|---|---|---|---|---|
| 1 | ஸ்வஸ்தி ஸ்ரீ | 1 | ண்ட சே | 1 | ல் செய் |
| 2 | கோச்ச | 2 | சாழப் | 2 | ய நினை |
| 3 | டயபன்மர் | 3 | பேரே | 3 | த்தார் |
| 4 | திரிபுவந | 4 | ரி அக | 4 | உண்டா |
| 5 | ச் சக்ர | 5 | யில் | 5 | கில்நக |
| 6 | வத்திக | 6 | நன்னை | 6 | ரத்து |
| 7 | ன் ஸ்ரீசு | 7 | யூருடை | 7 | ரோகி |
| 8 | ந்தர பா | 8 | யார் தி | 8 | நம்மி |
| 9 | ண்டிய | 9 | ருவிக் | 9 | லொ |
| 10 | தேவற் | 10 | கிரமந் வெ | 10 | ருத்த |
| 11 | குயாண் | 11 | ட்டின | 11 | ரல்லர் |
| 12 | டு ௰௨ வ | 12 | தன்ம | | |
| 13 | து வை | 13 | க்குள | | |
| 14 | ய்காசி | 14 | த்தில் யி | | |
| 15 | மாத மு | 15 | ன்நீரி | | |
| 16 | தல் செ | 16 | றைத்த[ல்] | | |
| 17 | யங்கொ | 17 | [ப]ாச்சுத | | |

ஜெயங்கொண்ட சோழபுரத்தில் தற்போது இக்கல்வெட்டு உள்ள ஏரி சோழர் காலத்திலேயே வெட்டப்பட்டதாகும். இதனை இச்சுந்தரபாண்டியன் கல்வெட்டு, ''செயங்கொண்ட சோழப் பேரேரி'' என்று குறிப்பிடுவதன் மூலம் உணரலாம். நாளடைவில் இவ்வேரி நன்கு பராமரிக்கப்படாமையால், நீர் வருவது குறைந்து விட்டது. இதனைக் கண்ட ஜெயங்கொண்டத்திற்கு அருகிலுள்ள நன்னையூர் என்ற ஊரைச் சேர்ந்த ''திருவிக்கிரமன்'' என்பவன் சுந்தர பாண்டியனின் 12வது ஆட்சியாண்டில், இவ்வேரிக்குத் தண்ணீர் வரும் தலைமடையில் (முகப்பில்) மேடு பள்ளங்களை வெட்டி, சமன் படுத்தி நன்றாகத் தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்தான். பின்னர் அந்த நீரை எக்காரியத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்பதையும் கல்வெட்டில் பொறித்து, ஏரியில் நட்டுவித்தான். இவ்வாறு வெட்டப்பட்ட குளத்தில் உள்ள நீரை நகரத்தில் உள்ள மக்கள் குடிநீருக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும். அது தவிர குளத்திலிருந்து ஏற்றம் வைத்து நீர் இறைத்தல், நீர்ப்பாசனம் செய்தல் போன்ற காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது என்றும், அவ்வாறு மீறி செய்பவர்கள் நகரத் துரோகிகள் என்றும், நகரத்தி லுள்ள சபையிலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவார்கள் என்றும் இக் கல்வெட்டு கூறுகிறது.

## நாயக்கர் காலக் கல்வெட்டு

கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில் கி. பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் காலக் கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இக்கல்வெட்டு ஊருக்கு அருகில் உள்ள ஒரு ஏரியில் துணி துவைக்கும் கல்லாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது கண்டுபிடிக்கப்பட்டு, தற்போது அகழ்வைப்பகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. கல் மிகவும் தேய்ந்து விட்டதால் சரியாகப் படிக்க இயலவில்லை.

கங்கைகொண்ட சோழபுரம் என்ற ஊர் ''கங்கை கொண்டம்'' என்று சுருக்கமாகப் பெயரிட்டு வழங்கப்பட்டதை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. தற்பொழுதும் இவ்வூரை ''கங்கைகொண்டான்''

என்று குறிப்பிடுவது நோக்கத் தக்கது. கி.பி.18-ஆம் நூற்றாண்டில் திருச்சியில் இருந்த துப்பாக்குல கவுதம நாயக்கர் என்பவர் சுபாநு வருடம் ஆடி மாதம் கங்கைகொண்ட சோழபுரத்திலுள்ள . . . . ஒருவருக்கு நிலம் சறுவ மானியமாகக் (முழுச் சுதந்திரமாக) கொடுக்கக் கட்டளையிட்டதை ஏற்றுப் பின் கல்வெட்டிக் கொடுத்ததாகவும் இவ்வாறு சறுவ மானியமாக விடப்பட்ட நிலத்தை அவன் சுதந்திரமாக அனுபவித்துக்கொள்ள உரிமை வழங்கப்பட்டதாகவும் கூறுகிறது.

## செப்புத் திருமேனிகள்

நாச்சியார், அய்யனார், பூரணை, புஷ்கலை, மாரியம்மன் முதலிய செப்புத் திருமேனிகளை திருச்சி மாவட்டம், உடையார் பாளையம் வட்டம் கீழவேலி என்ற ஊரில் பிச்சைப்பிள்ளை என்ற தனியார் ஒருவரிடமிருந்து சென்னைப் புலனாய்வுத் துறையினர் கைப்பற்றி அரியலூர் சார்நிலை நீதிமன்றத்திடம் ஒப்படைத்தனர். சார்நிலை நீதிமன்ற நீதிபதி திரு. என். எஸ். இராமகிருஷ்ணன் பி.ஏ., பி.எல்., அவர்கள் இச்செப்புத் திருமேனிகளைக் கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில் ஒப்படைக்க செயங்கொண்டம் வட்டாட்சியருக்குச் சிபாரிசு செய்தனர். அதன்படி வட்டாட்சியரிடமிருந்து இச்செப்புத்திருமேனிகள் பெறப்பட்டு கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

### நாச்சியார்

இச்செப்புத்திருமேனி தாமரை பீடத்தின் மீது நின்ற நிலையில் காணப்படுகிறது. இரு கரங்களில் வலது கரம் மலரைப் பற்றியும், இடதுகரம் தொங்கும் கரமாகவும் காணப்படுகிறது. நீள் சதுரமான முகமும், எடுப்பான நாசியும், புன் முறுவல் பூத்த முகமும், அழகான கண்களும், நாச்சியார் அம்மனுக்கு மெருகூட்டுகின்றன. தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் மகரக் குண்டலங்களும், கழுத்தில் பதக்கத்துடன் கூடிய மூன்று மாலைகளும் நாச்சியார் செப்புத் திருமேனிக்கு அழகூட்டுகின்றன. கைகளில் காப்பும், பாதங்களில் பாதசரமும் அணிந்து காணப்படுகிறது. இடுப்பிலிருந்து கால்கள் வரை வரி வரியான அலைகளையொத்த ஆடை

காணப்படுகிறது. இச்செப்புத்திருமேனியின் உயரம் பீடத்துடன் 30 செ.மீ. அகலம் 9 செ.மீ. இச்செப்புத் திருமேனியின் காலம் கி. பி. 16-17-ஆம் நூற்றாண்டாகும்.

### அய்யனார்

பத்ம பீடத்தில் அமர்ந்துள்ள நிலையில் காணப்படுகிறது. வலது காலைக் கீழே தொங்கவிட்டு, இடது காலை மடக்கி ஊன்றி அய்யனார் காணப்படுகின்றார். வலக்கரம் செண்டு பிடித்துள்ளது. இடக்கரத்தை இடது முழங்காலில் வைத்து நீட்டிக் கொண்டுள்ளார். இச்செப்புத் திருமேனியின் உயரம் பீடத்துடன் 24 செ. மீ. அகலம் 10 செ. மீ. காலம் கி. பி. 16 - 17-ஆம் நூற்றாண்டு.

### பூரணை

அய்யனாரின் துணைவியாரான பூரணை அய்யனாரின் வலது புரத்தில் பத்ம பீடத்தில் வலது காலைக் கீழே தொங்கவிட்டு, இடது காலை மடக்கி அமர்ந்து காணப்படுகின்றாள். வலது கரம் கீழே தொங்கும் கரமாகக் காணப்படுகின்றது. இடது கரம் தாமரை மலரைப் பிடித்துள்ளது. தலையில் கரண்ட மகுடமும், காதுகளில் பத்ர குண்டலங்களும், மார்பில் புரிநூலும் கச்சையும், கழுத்தில் மணிமாலையும், பாதம் வரை ஆடையும், கால்களில் சிலம்பும், தண்டையும், அணிந்து காணப்படுகின்றன. இச்செப்புத்திருமேனியின் உயரம் 24 செ. மீ. அகலம் 7 செ. மீ. காலம் கி. பி. 16-17-ஆம் நூற்றாண்டாகும்.

### புஷ்கலை

பத்ம பீடத்தின் மீது அமர்ந்து வலது காலை மடக்கி வைத்து, இடது காலை கீழே தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் காணப் படுகின்றாள். வலது கரத்தில் மலரைப் பற்றியும், இடது கரம் தொங்கும் கரமாகவும் காணப்படுகிறது. தலையில் கரண்ட மகுட மும், காதுகளில் பத்ர குண்டலங்களும், கழுத்தில் மணி மாலையும், பாதம் வரை ஆடையும், கால்களில் சிலம்பும் தண்டையும் காணப் படுகின்றன. மார்பில் கச்சை காணப்படவில்லை. இச்செப்புத் திருமேனியின் உயரம் 24 செ. மீ. அகலம் 7 செ. மீ. காலம் கி. பி. 16-17-ஆம் நூற்றாண்டு.

**மாரியம்மன்**

பத்ம பீடத்தின் மீது வலதுகாலைக் கீழே தொடங்கவிட்டு இடது காலை மடக்கி அமர்ந்த நிலையில் காணப்படுகின்றாள். நான்கு கரங்களில் முன் வலதுகரம் கத்தியைப் பற்றியும், முன் இடது கரம் கபாலம் பிடித்தும் காணப்படுகின்றன. பின் வலது கரம் திரிசூலம், பின் இடது கரம் படமெடுத்த பாம்புடன் உடுக்கையையும் பற்றி யுள்ளன. தலையில் சுடர் முடியும், காதுகளில் பத்ர குண்டலங் களும், கழுத்தில் பதக்கத்துடன் கூடிய மணி மாலையும் காணப் படுகின்றன. மார்பில் கச்சை காணப்படவில்லை. பீடத்தில் ''தத்தனூர் மாரி அம்மன், முத்துமாரி துணை'' என்ற வாசகம் எழுதப்பட்டுள்ளது. சுமார் 100 ஆண்டுகளுக்கு முந்திய இச்செப்புத் திருமேனியின் உயரம் 35 செ.மீ. அகலம் 9 செ.மீ.

பிற்காலத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் கங்கைகொண்ட சோழபுரப் பகுதியைச் சேர்ந்ததாகையால் இவ்வகழ்வைப்பகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## ஓலைச் சுவடிகள்

கங்கைகொண்ட சோழபுரம் அகழ்வைப்பகத்தில் இப்பகுதிப் பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஓலைச் சுவடிகள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**அவையாவன :-**

1. ரதி மன்மதன் வரலாறு
2. சூரபத்மன் சிங்கமுகன் தாரகன்
3. விநாயகர் வரலாறு
4. திவாகரம்
5. அருணகிரி அந்தாதி
6. அருணகிரி அந்தாதி-உரையுடன்
7. அபிராமி அந்தாதி
8. அனுப்பேரிசா தேவாரி துர்லபம்
9. அகஸ்தியர் பாடல் வைத்தியம்
10. உதயண குமாரகாவியம்
11. ஆதிபருவம்
12. திருக்குறள்
13. நீதிவெண்பா

## சிற்பங்கள்

### விநாயகர்-1

திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம் பெரியமறை என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டது. இச்சிற்பம் செவ்வக வடிவான பீடத்தின் மீது வலதுகாலைக் குத்திட்டு இடது காலை மடித்து நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. கீழ்க்கைகள் இரண்டும் உடைந்துள்ளன. இது கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பெரிய மறையில் கிடைத்துள்ள சப்தமாதர் குழுவைச் சார்ந்தது. இதன் உயரம் 75 செ.மீ. தோள் அகலம் 40 செ.மீ.

### விநாயகர்-2

இவ்வுருவம் திருச்சி மாவட்டம் உடையார் பாளையம் வட்டம் உதய நத்தம் என்னும் சிற்றூரிலிருந்து சேகரிக்கப்பட்டது. நான்கு கரங்களுடன் அமர்ந்த கோலத்தில் இவ்வுருவம் காட்சி யளிக்கிறது. கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் உயரம் 44 செ.மீ. அகலம் 25 செ.மீ.

### சிவலிங்கம்

இச்சிற்பம் உடையார்பாளையம் வட்டம் முட்டுவாஞ்சேரி என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டதாகும். சிவலிங்கமும் ஆவுடையாரும் நல்ல நிலையில் உள்ளன. லிங்கத்தின் அமைப்பினைக் கொண்டு இது கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கருதலாம். முட்டுவாஞ்சேரிப் பகுதியில் பிற்காலச் சோழர்காலக் கோயில் ஒன்று இருந்து மறைந்ததை இந்த சிவலிங்கத் தின் மூலம் அறியமுடிகிறது. இதன் உயரம் 1 மீட்டர்.

### அடிமுடிகாணா அண்ணல்-1

இச்சிற்பம் அரியலூர் வட்டம் குருவாடி என்ற ஊரிலிருந்து எடுத்துவரப்பட்ட சிற்பமாகும். இச்சிற்பம் அடியும் முடியும் மறைந்த நிலையில் நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் செதுக்கப்பட்டுள்ளது. வலது காதில் மகரக் குழையும் இடது காதில் வட்டமான ஓலைக் குழையும், கழுத்தில் கண்டசரம், முத்தாரம், சரப்பளி, சவடி ஆகிய அணிகளும் அணி செய்கின்றன. மேல்வலதுபுறத்தில் முடியைத்தேடும் அன்னமும், கீழ்இடதுபுறத்தில் அடியைத்தேடும் வராகமும் சிற்பவடிவில் காட்டப்பட்டுள்ளன.

இச்சிற்பத்தின் உருவ அமைப்பு, ஆடை, அணிகளின் தோற்றம் யாவும் கொண்டு கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச்சார்ந்த பிற்காலச் சோழர் சிலையாகக் கருதலாம். இச்சிற்பத்தின் உயரம் 1·15 மீட்டர் அகலம் 0.42 மீட்டர்.

### அடிமுடிகாணா அண்ணல்-2

இச்சிற்பமும் தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. சிவனது மேற்கைகளில் மழுவும், மானும் உள்ளன. கீழ்க்கைகள் அபயகரமாகவும் இடையின்கீழ் அமைந்த ஊருகரமாகவும் விளங்குகின்றன. இச்சிற்பம் கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலச்சோழர்கலையை வெளிப்படுத்துகிறது. இது சிவாலய கருவறையின் மேல்திசைமாடத்தை அலங்கரித்த சிற்பமாக இருத்தல் வேண்டும். இச்சிற்பத்தின் உயரம் 80 செ.மீ. அகலம் 36 செ.மீ.

### அடிமுடிகாணா அண்ணல்-3

இச்சிற்பம் சிதம்பரம் பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. தட்டையான உயர்ந்த லிங்கத்தின் ருத்ரபாகத்தின் நடுவே அடியும் முடியும் காண முடியாதவாறு ஒளிப்பிழம்பாகத் தோன்றும் சிவனது உருவம் லிங்கோத்பவராகக் காட்சி அளிக்கிறது. சிவனைச் சுற்றிலும் சுவாலைகளின் ஒளிவட்டம் நீள்வட்டவடிவில் அமைந்து அழகூட்டுகிறது. இச்சிற்பத்தின் அமைப்பும், ஆடை அணிகளும் கி. பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஜயநகரக் கலையை அடையாளம் காட்டுவதாக அமைகின்றன. இது சிவாலயத்தின் உண்ணாழியின் மேற்குப்புறத் தேவகோட்டத்திற்குரியது. இதன் உயரம் 0.78மீ. அகலம் 0.31 மீ.

### அடிமுடிகாணா அண்ணல்-4

இது உடையார் பாளையம் பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் தட்டையான லிங்கவடிவின் முன்புறம் இலை வடிவில் உட்குவிந்த பகுதியில் அடியும் முடியும் மறைந்த நிலையில் நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. இதன் இடது காலின் கீழ் அடிதேடும் வராகம் பன்றி முகமும் மானிட உடலும் கொண்டு காட்டப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் ஆடை அணிகளின் தன்மை, அங்கங்களின் அமைதி

யாவும் கொண்டு இதனைக் கி. பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கலையாகக் கொள்ளலாம். இதன் உயரம் 70 செ.மீ. அகலம் 30செ.மீ

### தட்சிணாமூர்த்தி-1

இச்சிற்பம் கங்கைகொண்ட சோழபுரத்தை ஒட்டிய பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டது. எழில் வாய்ந்த தெட்சிணாமூர்த்தியின் இச்சிற்பம் சிவாலய தேவகோட்டத்தின் தென்திசை மாடத்தை அலங்கரித்த சிற்பமாதல் வேண்டும். வீராசனத்தில் அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் மேல் வலக்கை மீது ஆடும் அரவம் வாலை சுருட்டியவாறும், இடக்கை ஜுவாலையுடன் கூடிய அக்னித் தண்டைப் பிடித்தும், கீழ்வலக்கை முழங்கை பகுதிவரை உடைந்துமுள்ளது. கீழ் இடக்கை சுவடி ஏந்திய நிலையில் தொடை மீது அமைந்துள்ளது தலையை முன்னோக்கிச் சாய்த்தவாறு கீழ்நோக்கி ஆழ்ந்த தியான அமைதியுடன் வடிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் தெட்சிணாமூர்த்தியின் பல்வகை வடிவங்களில் ஞானதெட்சிணாமூர்த்தியின் வடிவாக இருத்தல் வேண்டும். இதன் காலம் கி. பி. 10-ஆம் நூற்றாண்டு. முற்காலச் சோழரது தெட்சிணா மூர்த்தியின் சிற்பவடிவிற்குச் சான்றாகத் திகழ்கிறது. இதன் உயரம் 0.95 மீ. அகலம் 0.50 மீட்டர்.

### தட்சிணாமூர்த்தி-2

இச்சிற்பம் அரியலூர் வட்டம் ஏலாமாத்தூர் என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டது. சின் முத்திரை காட்டும் கீழ் வலக்கையும், ஏடு ஏந்திய இடக்கையும், அடையாளம் காண முடியாதவாறு சிதைந்துள்ளது. இடது திருவடியின் கீழ் சனகாதி முனிவர்களுள் ஒருவர் தத்துவம் கற்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளார். இச்சிற்பம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முந்திய சோழர் கலைப்படைப்பாகும். இவ்வூர் சிவாலயத்திற்குரியது. சிவாலய தேவகோட்ட தென்திசை மாடத்தை அலங்கரித்த சிற்பமாதல் வேண்டும். இதன் உயரம் 70 செ.மீ. தோள் அகலம் 22 செ.மீ.

### ரிஷப தட்சிணாமூர்த்தி-3

அரியலூர் வட்டம் திருமழபாடி என்ற ஊரில் இருந்து சேகரிக்கப்பட்டது. இச்சிற்பம் வேலைப்பாடு மிக்க மகர தோரணத்தின் நடுவே காளை வாகனத்தின் மீது நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கின்றது. காளையின் மீது இடது காலைக் குத்திட்டு வலது காலைத் தொங்கவிட்ட

நிலையில் காளையின் தலைமீது அமைந்தும், இடக்கை முழங்கால் மீது அமைந்தும் காட்சியளிக்கிறது.

இச்சிற்பத்தைச் சுற்றிலும் மகர தோரணம் வட்டவடிவில் அலங்கரிக்கிறது. இருபக்கங்களிலும் மகரங்களின் வாயிலிருந்து சீறிப்பாயும் ஆறு சிம்மங்கள் வரிசையாகக் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பம் சிவாலய தேவகோட்டத்திற்கு உரியது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் உயரம் 0.52 மீ. அகலம் 1.07 மீ.

## தட்சிணாமூர்த்தி-4

அரியலூர் வட்டம் கல்லக்குடி என்னும் ஊரிலிருந்து எடுத்து வரப்பட்டது. உயர்ந்த பீடத்தின் மீது வீராசனத்தில் நான்கு கைகளுடன் மேற்கைகள் இரண்டும் ஆடும் அரவத்தையும் அக்னித் தண்டையும் பிடித்தும், கீழ்க்கைகள் உடைந்தும் காணப்படுகின்றன. இதன் காலம் கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு. இதன் உயரம் 1 மீ. தோள் அகலம் 28 செ.மீ.

## தட்சிணாமூர்த்தி-5

அரியலூர் வட்டம் ஏலாமாத்தூர் என்னும் ஊரிலிருந்து எடுத்து வரப்பட்டது. வீராசனத்தில் அமர்ந்த கோலத்தில் காட்சி யளிக்கிறது. இதன் தலைமீது விரிந்த ஆலமரம் அமைந்து வனப்பூட்டுகிறது. வலது கையின் கீழ்ப்புரம் சிவனது காளை வாகனம் அமர்ந்தவாறு காட்டப்பட்டுள்ளது. ஜடாபாரம் தலைக் கோலமாக, இதன் முகப்பைக் கபாலத்தோடு கூடிய இரு பிணைந்த நாகங்கள் அலங்கரிக்கின்றன. இடுப்புவரை இரண்டு துண்டாக உள்ள இச்சிற்பம் மொத்தம் 135 செ.மீ, உயரமுடையது. இதன் தோள் அகலம் 29 செ.மீ. கரிய நிறக்கல்லால் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட இச்சிற்பம், கி.பி. 12-13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

## தட்சிணாமூர்த்தி-6

இச்சிற்பம் அரியலூர் வட்டம் உடையவர் தீயனூர் என்னும் கிராமத்திலிருந்து சேகரிக்கப்பட்டது. இது இவ்வூர்ச் சிவாலயத்துக்குரியது. இச்சிற்பத்தின் மேற்பகுதி உடைந்து விட்டது. இடுப்புக்குக் கீழ்ப்பகுதி மட்டும் எஞ்சியுள்ளது. இவ்வுருவம் கி.பி. 12-13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதன் உயரம் 48 செ.மீ. அகலம் 34 செ.மீ.

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY MADRAS

### ரிஷப அர்த்தநாரி

அரியலூர் வட்டம் பெரியமறை என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டது. சிவனது வலப்பாகத்தில் இரண்டு கைகளும் உமையின் இடப்பாகத்தில் ஒரு கையுமாக அமைந்து காணப்படுகிறது. வலது மேல்கை பற்றியுள்ள ஆயுதம் சிதைந்துள்ளது. அதுபோல உமையின் இடக்கை ஏந்தியுள்ள பொருளும் சிதைந்துள்ளது. வலப்புறம் சடை மகுடமாகவும் இடப்புறம் கரண்ட மகுடமாகவும் வலது காதில் மகர குண்டலங்களும் இடது காதில் ஓலைக் குழையும் வலப்புறம் விரிந்த மார்பும் இடப்புறம் குவிந்த தனமும் காட்டப்பட்டுள்ளன. ரிஷபத்தோடு தோன்றும் அர்த்தநாரியின் இச்சிற்பம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது. பராந்தக சோழன் காலத்தியது. இதன் உயரம் 65 செ.மீ. தோள் அகலம் 22 செ. மீ.

### நான்முகன்

இச்சிற்பமும் பெரியமறை என்னும் ஊரில் சேகரிக்கப்பட்டது. இது பீடத்தின் மீது நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் அமைந்துள்ளது. நீண்டு மெலிந்த உடல்வாகும், அளவான அங்கங்களும், சதுரமான பரந்த முகமும், அகன்ற நெற்றியும், கோடிட்ட புருவமும், நீண்ட அரைக்கண்களும், மூடிய இதழ்களைக் கொண்ட திருவாயும் கொண்டு எழில் மிக்கதாக விளங்குகிறது. இச்சிற்பத்தில் சிறிய மலர்ப்பீடம் காட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இச்சிற்பம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது. இதன் உயரம் 84 செ.மீ. தோள் அகலம் 29 செ.மீ.

### துர்க்கை-1

உடையார்பாளையம் வட்டம் மங்கதேவநல்லூர் என்ற சிற்றூரிலுள்ள இலுப்பைத் தோப்பில் தற்செயலாக மண்ணைத் தோண்டும்போது கிடைத்தது. இச்சிற்பம் கிடைத்த பகுதியில் சிவாலயம் ஒன்று இருந்து அழிந்ததற்கான சுவடுகள் காணக் கிடைக்கின்றன. இச்சிற்பம் கூம்பு வடிவ செருகு பீடத்தில் நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. துர்க்கையின் சதுரமான சிறிய முகம் தேய்ந்துள்ளது. இச்சிற்பத்தின் உருவ அமைதி ஆடை அணிகளின் தோற்றம் யாவும் கொண்டு கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முற்காலச் சோழர் கலைப்படைப்பாகக் கருதலாம்.

**துர்க்கை-2**

அரியலூர் வட்டம் பெரிய குறிச்சி என்ற ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டது. இவ்வூரைச் சேர்ந்த சிவாலயத்தின் அர்த்த மண்டபத்தேவகோட்டத்தை அலங்கரித்த சிற்பமாக இருத்தல் வேண்டும். நின்ற கோலத்தில் மேல் வலக்கை மலர் முகப்புடைய சுவாலையுடன் கூடிய சக்கரத்தைப் பற்றியும், இடக்கை உடைந்தும் உள்ளது. இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை அலை அலையான மடிப்புகளுடைய ஆடையும், இடையின் பக்கங்களில் முடிச்சுகளுடைய ஆடைக்கட்டும், முழங்காலுக்குக் கீழ்வரை காட்டப்பட்டுள்ளது. இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் உயரம் 85 செ.மீ. தோள் அகலம் 30 செ.மீ.

**துர்க்கை-3**

அரியலூரில் சேகரிக்கப்பட்டது. நின்ற நிலையில் நான்கு கைகளுடன் உள்ள இச்சிற்பத்தின் மேற்கைகள் ஆழியும், சங்கத்தையும் பற்றியுள்ளன. அபயம் காட்டும் கீழ் வலக்கை உடைந்துள்ளது. இது கி.பி. 10 - 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. அரியலூர்ச் சிவாலயத்திற்குரியது. இதன் உயரம் 58 செ.மீ. தோள் அகலம் 42 செ.மீ.

**துர்க்கை-4**

திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், திருமழபாடி என்ற ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டது. நான்கு கரங்களுடன் நின்ற கோலத்தில் உள்ள இச்சிற்பம் இடுப்புக்குக்கீழ் உடைந்து, மேற்பகுதி மட்டும் எஞ்சியுள்ளது. மேற்கைகள் கல்தூணையும், சங்கினையும் பற்றியுள்ளன. இதன் தலையைப் பூரிமம் பதித்த வேலைப்பாடுகள் மிக்க கரண்ட மகுடம் அலங்கரிக்கின்றது. இச்சிற்பம் கி.பி. 11-12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதன் உயரம் 48 செ.மீ. அகலம் 48 செ.மீ.

**துர்க்கை-5**

கங்கைகொண்ட சோழபுரத்தை ஒட்டிய பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டது. இச்சிற்பம் எண் தோள்களுடன் நின்ற கோலத்தில் வனப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. சக்கரம், சங்கு, வாள், கேடயம், அம்பு, வில் ஆகிய ஆயுதங்களை ஆறு கரங்களில் ஏந்தியும், ஏனைய இரு கரங்கள் அபயகரமாகவும்

இடையில் அமைந்த கரமாகவும் கொண்டு காட்சியளிக்கிறது. இச் சிற்பம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர்காலக் கலையை வெளிப்படுத்துகிறது. உயரம் 76 செ.மீ. அகலம் 43 செ.மீ.

### துர்க்கை-6

அரியலூர் வட்டம் ராயம்புரம் என்ற சிற்றூரிலிருந்து எடுத்துவரப்பட்டது. நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சதுரமான பரந்த முகமும், விரிந்த நெற்றியும், தூக்கிய புருவமும், எடுப்பான மூக்கும், குவிந்த உதடுகளும், அருள் சுரக்கும் கண்களும் கொண்டு விளங்கும் இச்சிற்பம் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இச்சிற்பத்தின் உயரம் 0.85 மீ. அகலம் 0.44 மீ

### துர்க்கை-7

அரியலூர் வட்டம் திருமழபாடி என்ற ஊரிலிருந்து எடுத்து வரப்பட்டது. நின்ற கோலத்தில் உள்ள இச்சிற்பத்தில் நான்கு கரங்கள் உள்ளன. துர்க்கையின் கால்ப் பகுதிகள் உடைந்துள்ளன. இது கி.பி. 16-17ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் உயரம் 33 செ.மீ. அகலம் 35 செ மீ.

### மலைமகள்

அரியலூர் வட்டம் புதுக்கோட்டை என்ற ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. இது இவ்வூரைச் சார்ந்த சிவாலய காமகோட்டக் நாச்சியார் சந்நிதிக்குரியது. சிறிய பீடத்தின் மீது நேராக நின்ற நிலையில் நான்குகைகளுடன் வனப்போடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் தலையை அழகிய சடை மகுடமும் பின்தலையைச் சிறிய சிரச்சக்கரமும் அலங்கரிக்கின்றன. இச் சிற்பத்தின் வடிவமைப்பு, ஆடை அணிகளின் தன்மை, தலைக்கோலம், முகப்பொலிவு, மேனியின் அழகு, இடைவனப்பு, அங்கங்களின் அமைப்பு, காந்தள் மலர்களை ஒத்தவிரல்களின் வனப்பு, யாவும் அழகோடும், அளவோடும் அமைந்து விளங்கக் காணலாம். இச்சிற்பத்தின் முன்னழகும், பின்னழகும் காணத்தக்கது. இது கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது. இதன் உயரம் 1.30 மீ. அகலம் 0.37 மீ.

### காமக்கோட்ட நாச்சியார்-1

கங்கை கொண்டசோழபுரத்தை ஒட்டிய பகுதியைச் சார்ந்த சிதைந்த சிவன் கோயிலிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம்

இங்குள்ள சிற்பத்தொகுப்பில் எழில்மிக்கது. உருக்கி வார்த்த செப்புச்சிலையைப் போன்று கல்லிலே கவினுற வடிவமைக்கப் பட்டுள்ளது. இதன் எழில்மிக்க கரங்கள் நான்கும் அடையாளம் தெரியாதவாறு உடைந்துள்ளன. கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சோழர் கலையாகக் கருதலாம். சிவாலயத்தின் காமக்கோட் டத்திற்குரிய தெய்வமாக மலைமகளின் இவ்வுருவம் கருதப்படுகிறது. கலைவளம் மிக்க இச்சிற்பம் முதலாம் இராசேந்திரன் காலத்தின் காமக்கோட்ட நாச்சியார் சிற்பத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ் கிறது. இதன் உயரம் 1.30 மீ. தோள் அகலம் 0.28 மீ.

### காமக்கோட்ட நாச்சியார்-2

அரியலூர் வட்டம் முட்டுவாஞ்சேரி என்ற ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டது. இச்சிற்பம் நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் அமைந்துள்ளது. இதன் மேற்கைகளும், கீழ்க்கைகளும் அடையாளம் காண முடியாதவாறு உடைந்துள்ளன. இதன் ஆடை அணிகள் யாவும் கி.பி. 11-12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பிற்காலச் சோழர் சிற்பமாகக் கருத இடமளிக்கிறது. இது இவ்வூர்ச் சிவாலயத் தின் அருகிலிருந்த காமக்கோட்ட அம்மனின் சிலையாகக் கருதப் படுகிறது. இதன் உயரம் 97 செ.மீ. தோள் அகலம் 18 செ.மீ.

### தேவி

அரியலூர் வட்டம் திருமழபாடி என்ற ஊரிலிருந்து சேகரிக்கப் பட்டது. இதன் தலை உடைந்துவிட்டது. கழுத்துக்குக் கீழ் உள்ள உடற்பகுதி மட்டும் எஞ்சியுள்ளது. இச்சிற்பம் நின்ற கோலத்தில் இரண்டு கைகளுடன் இடையை இடப்புறமாக வளைத்து திரிபங்கி யாகக் காட்சி அளிக்கிறது. இது கி.பி. 15-16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 65 செ.மீ. தோள் அகலம் 30 செ.மீ.

### முருகன்

கங்கைகொண்ட சோழபுரத்தை ஒட்டிய பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டதாகும். முருகனின் தலைப்பகுதி மட்டும் உள்ளது. இதன் தலையை எழில் வாய்ந்த கரண்ட மகுடம் அலங்கரிக்கின்றது. உருண்டையான ஒடுங்கிய முகமும், விரிந்த நெற்றியும், சோடிட்ட புருவமும், எடுப்பான மூக்கும், விரிந்த உதடுகளும் கொண்டு பேரழகோடு திகழ்கிறது. இது கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது. கங்கை கொண்ட சோழபுரத்து முருகன்

சிற்பங்களோடும், செப்புச்சிலையோடும் ஒப்பிடத்தக்கது. இதன் உயரம் 40 செ.மீ. அகலம் 28 செ.மீ.

### மயில் வாகனன்

அரியலூர் வட்டம், சின்னப்பட்டாக்காடு என்னும் சிற்றூரிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளது. அவ்வூர்ச் சிவாலயத்திலிருந்த பரிவார தெய்வங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இச்சிற்பத்தின் மேல்வலக்கையில் சக்திப்படையும், இடக்கையில் வஜ்ரப்படையும் உள்ளன. கீழ்க்கைகள் இரண்டும் முழங்கைவரை உடைந்துள்ளது. தலையை வேலைப்பாடுமிக்க நீள் மகுடம் அலங்கரிக்கிறது. கண்ணி மாலையும், முத்துப்பட்டமும், வட்ட குழைகளும் அலங்கரிக்கின்றன மார்பில் வீரச்சங்கிலியும், இடையில் கீர்த்தி முகப்புடைய கச்சையும் கடிபந்தமும், தொடைகளின் மேல் முத்துத்தாமமும் அழகு செய்கின்றன. பின்புறம் இவரது வாகனமான மயில் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளது, இதன் ஆடை, அணிகள். ஆயுதங்களின் அமைப்பு யாவும் கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிற்காலச் சோழர் கலையை அடையாளம் காட்டுவதாக அமைகின்றன. இதன் உயரம் 1.15 மீ. அகலம் 0.50 மீ.

### சுப்ரமணியர்

இச்சிற்பம் அரியலூர் வட்டம் காமரசவல்லி என்னும் சிற்றூரிலிருந்து சேகரிக்கப்பட்டது. நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. இதன் பின்புறம் அலகில் ஆடும் அரவத்தைக் கவ்விய நிலையில் அழகிய மயில் நின்ற கோலத்தில் காட்டப்பட்டுள்ளது. இது கி.பி. 12-13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் உயரம் 105 செ.மீ. தோள் அகலம் 31 செ.மீ.

### சண்டீச்சுரர்-1

சிதம்பரம் பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலும் சண்டீசரின் உருவங்கள் இரண்டு கைகளுடன் வலக்கை மழுவை ஏந்தியும், இடக்கை தொடை மீது அமைந்தும் காணப்படும்.

ஆனால் இங்கு வலக்கை கோடரி வடிவுடைய மழுவையும் நீண்ட மலர்ச் செண்டை ஒத்தபொருளையும் கொண்டுள்ளது. கீழ்வலக்கை முன்தோளோடு அமைந்து அபய முத்திரையைக் காட்டுகிறது. இடக்கை மடித்தவாறு தொடைமீது அமைந்துள்ளது. இதன் ஆடை, அணிகள், ஆயுதங்கள் யாவும்

கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முந்திய சோழர் கலையை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. சிதம்பரம் பகுதியில் இதுவரை காணக்கிடைத்துள்ள சிற்பங்களில் இதுவே காலத்தால் பழமை மிக்கது. இது ஆதித்த சோழன் காலத்திய கலையாகக் கருதப் படுகிறது. இதன் உயரம் 1.02 மீ. அகலம் 0.52 மீ.

**சண்டீச்சுரர்-2**

கங்கைகொண்ட சோழபுரத்தை ஒட்டிய பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. உயர்ந்த பீடத்தின் மீது இடது காலை மடித்தவாறு, வலது காலைத் தாமரை இருக்கை மீது கொண்டு அமர்ந்த நிலையில் வலக்கை மழுவைப் பிடித்தும் இடக்கை தொடை மீது அமைந்துமுள்ளது. மகுடத்தின் உச்சியில் மலர்ந்த தாமரை அலங்கரிக்கின்றது. சிறிய வடிவில் வனப்போடு வடிவமைக்கப் பட்டுள்ள இவ்வுருவம் கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியைச் சார்ந்தது. இம்மன்னன் காலத்திய கற்றளியைச் சார்ந்த பரிவார தெய்வமாகக் கருதப்படுகிறது. இதன் உயரம் 57 செ.மீ. அகலம் 7 செ.மீ.

**சண்டீச்சுரர்-3**

இதுவும் கங்கைகொண்ட சோழபுரத்தை ஒட்டிய பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டது, இரண்டு கைகளுடன் இருந்த கோலத்தில் காட்சி அளிக்கிறது. இச்சிற்பத்தில் வலது தொடையிலிருந்து இடதுகைவரை ஒரு வெடிப்பு ஏற்பட்டுள்ளது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது. இதன் உயரம் 65 செ.மீ. தோள் அகலம் 20 செ.மீ.

**சண்டீச்சுரர்-4**

அரியலூர் வட்டம் பெரியமறை என்னும் ஊரிலிருந்து இச் சிற்பம் எடுத்து வரப்பட்டது. செவ்வகப் பீடத்தின் மீது இடது காலை மடித்து, வலதுகாலைத் தொங்க விட்ட நிலையில் இரண்டு கைகளுடன் அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. வலக்கை மழுவைப் பிடித்து முன்தோளில் சாய்த்தவாறும், இடக்கை தொடை மீது அமைந்தும் காணப்படுகிறது. வட்டமாக ஒடுங்கிய முகமும் அகன்ற நெற்றியும் உயர்ந்த புருவமும் அமைதி தவழும் கண்களும் குவிந்த இதழ்களும் கொண்டு அளவோடும் அழகோடும் இச்சிற்பம் படைக்கப்பட்டுள்ளது. இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 104 செ.மீ. தோள் அகலம் 34 செ.மீ.

**சண்டீச்சுரர்-5**

அரியலூர் வட்டம் ஏலாமாத்தூர் என்னும் சிற்றூரில் இருந்து சேகரிக்கப்பட்டது. இவ்வூரில் இருந்த சிவாலயத்திற்குரிய பரிவார தெய்வங்களில் ஒன்றாகலாம். இடதுகாலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்டு, இரண்டு கைகளுடன் இருக்கையில் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறது. வலக்கை மழுவாயுதத்தையும் இடக்கை தொடைமீதும் அமைந்திருக்கத் தலையை விரிந்த ஜடாபாரம் அலங்கரிக்கிறது. இச்சிற்பம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 60 செ.மீ. அகலம் 28 செ.மீ.

**பைரவர்-1**

கங்கைகொண்ட சோழபுரத்தை ஒட்டிய பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டது. நான்கு கைகளுடன் நின்ற கோலத்தில் காணப் படுகிறது. மேல் வலக்கை உடுக்கையைப் பிடித்துள்ளது. மேல் இடக்கை உடைந்துள்ளது. முன்னிரு கைகளும் முழங்கை வரை உடைந்துள்ளன. வலது முன்தோளின் ஆடும் அரவம் ஒன்று மகுடத்தோடு காட்டப்பட்டுள்ளது. இடது மார்பிலிருந்து தொடை வரை கபால மாலை அலங்கரிக்கிறது. ஆடையற்ற இடையைச் சுற்றிலும் இரு நாகங்கள் அரைஞாணாக அமைந்துள்ளன. முன் கைகளும் தலையும் இச்சிற்பத்தில் உடைந்துள்ளன. பின்புறம் நாய் வாகனம் காட்டப்பட்டுள்ளது. இது கி.பி. 12-13-ஆம் நூற்றாண் டைச் சார்ந்தது. இதன் உயரம் 55 செ.மீ. தோள் அகலம் 31 செ.மீ.

**பைரவர்-2**

அரியலூர் வட்டம் பெரியமறை கிராமத்திலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். நான்கு கரங்களில் ஆயுதம் ஏந்திய நிலையில் வடுகர், வாகனத்துடன் நேராக நின்ற நிலையில் காணப்படுகிறார். மேற்கையில் உடுக்கையும் இடக்கையில் ஆடும் நாகமும், வலது கீழ்க்கையில் திரிசூலமும் பிடித்துள்ளார். இடுப்பைச் சுற்றிலும் மணிகள் கோர்த்த அரைஞாணும் இடது தோளிலிருந்து முழங் காலுக்குக் கீழ்வரை மண்டைக் கபால மாலையும் இருக்க, வாகன மான நாய் குனிந்த தலையும், மேல்நோக்கி சுருண்ட வாலும், நீண்ட உடல் வாகும் பெற்ற நிலையில் பின்புறம் அமைந்துள்ளது. இதன் காலம்கி. பி. 12-13 - ஆம் நூற்றாண்டு. இதன் உயரம் 80 செ.மீ அகலம் 45 செ.மீ.

### பிராமி

அரியலூர் வட்டம் பெரியமறை என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப் பட்டது. இது இவ்வூரிலிருந்த சப்தமாதர் குழுவைச் சார்ந்தது. செவ்வக பீடத்தின் மீது வலது காலைத் தொங்கவிட்டு, இடது காலைப் பீடத்தில் மடக்கி அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் காணப்படுகிறது. இது கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி யைச் சார்ந்தது. இதன் உயரம் 95 செ.மீ. தோள் அகலம் 30 செ.மீ.

### மகேச்வரி

இதுவும் பெரியமறை என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப் பட்டதே. இது இவ்வூர் சப்தமாதர் குழுவைச் சார்ந்தது. செவ்வக பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் காட்சியளிக் கிறது. இச்சிற்பம் கி. பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் உயரம் 95 செ.மீ. தோள் அகலம் 32 செ.மீ.

### வைணவி

இதுவும் பெரியமறை என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப்பட்ட சப்தமாதர் குழுவைச் சார்ந்தது. செவ்வக இருக்கை மீது வலது காலைத் தொங்கவிட்டு, இடதுகாலை மடக்கிப் பீடத்தின்மீது அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறது. மேற்கைகள் ஆழியையும், சங்கத்தையும் பற்றியுள்ளன. கீழ்வலக்கை உடைந்துள்ளது. கீழ் இடக்கை தொடைமீது அமைந்துள்ளது. இதன் வலது கீழ்க்கையும், தனங்களும் முற்றிலும் உடைந்துள்ளன. இது கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது. 100 செ.மீ. உயரமும் 31 செ.மீ. தோள் அகலமும் கொண்டது.

### இந்திராணி

இதுவும் மேற்குறித்த பெரியமறை என்ற ஊரிலிருந்து சேகரிக்கப் பட்ட சப்தமாதர் குழுவைச் சார்ந்ததே. செவ்வக பீடத்தின் மீது இடதுகாலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்ட நிலையில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறது. இதன் இடுப்புக்குக் கீழ் உள்ள கால்கள் முற்றிலும் சிதைந்துள்ளன. கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்ததாகக் கருதலாம். இதன் உயரம் 95 செ.மீ. தோள் அகலம் 30 செ.மீ.

## வராகி

பெரியமறை என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டது. இது இவ்வூர்ச் சப்தமாதர் குழுவைச் சார்ந்தது. பன்றி முகமும், பெண்ணின் உடலும் கொண்ட வராகியின் உருவத்தில் முகத்தின் பக்கங்களின் காதுகள் விரிந்துள்ளன. முகம் கூர்மையாக நீண்டும், சிறிய கண்களும், கீழ்நோக்கிய வாயும் கொண்டு திகழ்கிறது. இச்சிற்பத்தின் வலதுகாற்பகுதி சிதைந்துள்ளது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது. இதன் உயரம் 95 செ.மீ. தோள் அகலம் 33 செ.மீ.

## சாமுண்டி

இதுவும் பெரியமறை என்ற ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டதே. மேற்குறித்த சப்தமாதர் குழுவைச் சார்ந்ததே. நான்கு கைகளுடன் இருந்த கோலத்தில் காட்சியளிக்கிறது. மார்பின் நடுவே பெரிதும் சிறிதுமாக மண்டை ஓடுகள் கோர்த்த கபாலமாலை அலங்கரிக்கிறது. இவ்வுருவம் சீற்றத்தோடு படைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது இதன் உயரம் 95 செ.மீ. தோள் அகலம் 30 செ.மீ.

## யோகீச்சுரர்

பெரியமறை என்ற ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டது. இது இவ்வூர் சப்தமாதர் குழுவைச் சார்ந்தது. அமர்ந்த நிலையில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறது. இதன் மேற்கைகளில் வலக்கை திரிசூலத்தையும், இடக்கை அக்கமாலையையும் பற்றியுள்ளன. முன் வலக்கை அபய முத்திரையில் அருள்பாலிக்கிறது. இடக்கை தொடை மீது அமைந்துள்ளது. இது கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது. இதன் மகுடத்தின் பக்கங்களில் வெடிப்புகள் காணப்படுகின்றன. இது சாம்பல் நிறக்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 98 செ.மீ. தோள் அகலம் 33 செ.மீ.

## பிராமி-மகேச்வரி

அரியலூர் வட்டம் ஏலாமாத்தூர் என்ற கிராமத்திலிருந்து இச்சிற்பம் சேகரிக்கப்பட்டது. சப்தமாதர் குழுவைச் சார்ந்த பிராமி, மகேச்வரி ஆகிய இரு சிற்பங்கள் ஒரே கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ளன. பிராமியின் உருவம் மேல் வலக்கையில் அக்கமாலையையும் இடக்கையில் கமண்டலத்தையும் பற்றியுள்ளன. காதுகளில்

ருத்திராக்க குண்டலங்களும், கழுத்தில் கண்டசரமும், சரப்பளியும் சவடியும் அலங்கரிக்கின்றன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் உயரம் 60 செ.மீ. தோள் அகலம் 40 செ.மீ.

மகேச்வரியின் சிற்பம் நான்கு கைகளுடன் வீற்றிருக்கிறது.

**இந்திராணி**

ஏலாமாத்தூர் கிராமத்திலிருந்து இச்சிற்பம் சேகரிக்கப்பட்டது. மேல் வலக்கை வஜ்ரப்படையையும், இடக்கை சக்திப் படையையும் கொண்டுள்ளது. கீழ்க்கைகள் இரண்டும் அபயமுத்திரையிலும், சிம்மகரண முத்திரையிலும் அமைந்துள்ளன. வலது திருவடி தாமரை மலரின் மீது அமைந்துள்ளது. இச்சிற்பம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இதன் உயரம் 70 செ.மீ. அகலம் 40 செ.மீ.

**வராகி-வைஷ்ணவி-கௌமாரி**

ஏலாமாத்தூரிலிருந்து சேகரிக்கப்பட்டது. நீண்ட பலகைக் கல்லில் வராகி, வைஷ்ணவி, கௌமாரி ஆகிய மூன்று உருவங்களும் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளன. இதில் வராகியின் உருவம் மேல்வலக்கையில் கலப்பையைப் பற்றியுள்ளது. இடக்கை ஏந்தியுள்ள ஆயுதம் சிதைந்துள்ளது. இதன் உயரம் 60 செ.மீ. தோள் அகலம் 22 செ.மீ.

வைஷ்ணவியின் மேற்கைகளில் சக்கரமும் சங்கும், கீழ்க்கைகள் அபய வரத கரங்களாகவும் அமைந்துள்ளன. உயரம் 60 செ.மீ. தோள் அகலம் 21 செ.மீ.

கௌமாரி நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப் படுகிறது. மேல் வலக்கை வஜ்ரப் படையையும், இடக்கை சக்திப் படையையும், கீழ்வலக்கை அபய முத்திரையிலும், இடக்கை வரத முத்திரையிலும் அமைந்துள்ளன. உயரம் 60 செ.மீ. அகலம் 22 செ.மீ.

இவற்றின் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

**சாமுண்டி**

கங்கை கொண்ட சோழபுரத்தை ஒட்டிய பகுதியிலிருந்து சேகரிப்பட்டதாகும். நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில்

காட்சியளிக்கிறது வட்டமுகமும், நெளிந்த புருவமும், விரிந்த கண் களும் கொண்ட இச்சிற்பத்தின் முகம் தேய்ந்துள்ளது. இச்சிற்பம் முந்திய சோழர் காலமான 10-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது. உயரம் 0.60 செ.மீ. அகலம் 0.40 செ.மீ.

## சேட்டை

பெரியமறை என்னும் ஊரில் சேகரிக்கப்பட்டது. சதுரமான பலகைக் கல்லின் முன்புறம் மாந்தன், சேட்டை, மாந்தி ஆகிய மூவரின் சிற்ப உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. நடுவே சேட்டை இரண்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காட்டப்பட்டுள்ளாள். இரு கைகளிலும் மலர்ந்த தாமரை மலரை ஏந்திய மாந்தியின் உருவம் வலதுகாலைக் குத்திட்டு, இடதுகாலைத் தொங்க விட்ட நிலையில் காணப்படுகிறது. வலக்கை மலரைப் பிடித்துள்ளது. வலப்புறம் மாந்தனின் இடுப்புக்குக் கீழ் உள்ள பகுதி மட்டுமே எஞ்சி யுள்ளது. காலம் கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டு. உயரம் 50 செ.மீ. அகலம் 60 செ.மீ.

## துவாரபாலகர்-1

அரியலூரிலிருந்து சேகரிக்கப்பட்டது. வலதுகாலைக் கதாயுதத் தின் மீது நிறுத்திய நிலையில் இரண்டு கைகளுடன் அமைக்கப் பட்டுள்ளது. தலையில் சிம்ம முகப்புடைய சடை மகுடமும், பின் தலையில் வட்டமான சிரச்சக்கரமும் கொண்டு நிறைந்த அணி களுடன் விளங்குகிறது. கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நாயக்கர் காலத்திய சிறிய துவார பாலகரின் சிற்ப வடிவிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இதன் உயரம் 83 செ·மீ. அகலம் 33 செ.மீ.

## துவாரபாலகர்-2

அரியலூரிலிருந்து சேகரிக்கப்பட்டது. தலையின் மேற்பகுதி மகுடம் அடையாளம் காண முடியாதவாறு உடைந்துள்ளது. நெளிந்த புருவமும், கொட்டை விழிகளும், புடைத்த நாசியும், கடை வாய்ப்பற்களோடு கூடிய வாயும் கொண்டு காத்து நிற்கும் இச் சிற்ப வடிவம் கி பி. 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது· இதன் உயரம் 77 செ·மீ. தோள் அகலம் 24 செ.மீ.

**நந்தி-1**

*பெரம்பலூர் வட்டம் கொட்டரை என்னும் ஊரிலிருந்து எடுத்து வரப்பட்டது. கால்களை மடக்கியவாறு அமர்ந்த நிலையில் காணப்படுகிறது. இதன் கழுத்தில் சிறுமணிகள் கோர்த்த கழுத்துவாரும், பெருமணியும் சதங்கைகளும் கோர்த்த கழுத்தணியும் அலங்கரிக்கின்றன. இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 80 செ.மீ. நீளம் 104 செ.மீ.*

**நந்தி-2**

*அரியலூர் வட்டம், திருமானூர் என்ற ஊரில் சேகரிக்கப்பட்டது. சோழர்காலக் கோயில் ஒன்றின் விமானத்தின் வேதிப்படையை அலங்கரித்த சிற்பமாதல் வேண்டும். நெற்றியில் சுட்டியும் கழுத்தில் பல்வகை வார் அணிகளும், சதங்கையும் அலங்கரிக்கின்றன. வலது கொம்பும் வலது காதும் சிதைந்துள்ளது, இது கி.பி 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. நீளம் 60 செ.மீ. அகலம் 30 செ.மீ. உயரம் 50 செ.மீ.*

**நந்தி-3**

*உடையார் பாளையம் வட்டம் கொல்லாபுரம் என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. சிவாலயக் கற்றளியின் விமானத்தை அலங்கரித்த நந்தியின் உருவமாக இது இருத்தல் வேண்டும். தலையை உயர்த்தியவாறு அமர்ந்துள்ளது. கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.*

**திருமால்-1**

*கங்கைகொண்ட சோழபுரத்தை ஒட்டிய பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டது. நான்கு கைகளுடன் நேராக நின்ற கோலத்தில் அமைந்துள்ளது. பின்னிரு கைகள் சக்கரத்தையும், சங்கையும் பற்றியுள்ளன. வலக்கை முழங்கைவரை உடைந்துள்ளது. இடக்கை இடையின்மீது அமைந்த கரமாகக் காணப்படுகிறது. இது கி.பி. 9-10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. முந்தைய சோழர் காலத்திய திருமாலின் சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. இதன் உயரம் 90 செ.மீ. தோள் அகலம் 26 செ.மீ.*

**திருமால்-2**

*அரியலூர் வட்டம் திருமானூரிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. நேராக நின்ற நிலையில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறது.*

மேற்கைகள் இரண்டும் ஆழியையும், சங்கத்தையும் கொண்டு கீழ்வலக்கை அபய முத்திரையிலும், இடக்கை இடைமீது அமைந்த கரமாகவும் காணப்படுகிறது. தலையில் உயர்ந்த கிரீட மகுடமும், பின்தலையில் சிரச்சக்கரமும் அழகு செய்கின்றன. மேல் வலக்கை பற்றியுள்ள சக்ராயுதம் நடுவில் மலர் முகப்புடனும், சுற்றிலும் சுவாலைகளுடனும் அமைந்து பக்கவாட்டில் காட்டப்பட்டுள்ளது. வலது மார்பின் ஸ்ரீவத்சம் காட்டப்பட்டுள்ளது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்த சிற்பமாகக் கருதலாம். இதன் உயரம் பீடத்துடன் 1.40 மீ. அகலம் 0.65 மீ.

## திருமால்-3

கங்கை கொண்ட சோழபுரம் அருகில் உள்ள இளைய பெருமாள் நல்லூர் என்னும் சிற்றூரிலிருந்து எடுத்து வரப்பட்டது. வலக்கையில் பிரயோகச் சக்கரமும் இடக்கையில் சுவாலையுடன் கூடிய சங்கினையும் பற்றி நிற்கிறது. காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. உயரம் 2.16 மீட்டர். அகலம் 53 செ.மீ. இச்சிலை இளையபெருமாள் நல்லூர் கல்லடை ஏரியைத் தேடும் போது புதையலாகக் கிடைத்தது.

## திருமால்-4

சிதம்பரம் வட்டம் நெடுஞ்சேரிபுத்தூரிலிருந்து சேகரிக்கப் பட்டுள்ளது. பின்கைகள் இரண்டும் உடைந்துள்ளன. முன் வலக்கை அபயமுத்திரையிலும், இடக்கை தொடையின் மீதும் காணப்படுகிறது. இதன் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு உயரம் 1.06 மீட்டர். அகலம் 30 செ.மீ.

## திருமால்-5

அரியலூர் வட்டம் ஸ்ரீபுரந்தான் என்ற ஊரிலிருந்து இச்சிற்பம் சேகரிப்பட்டது. நேராக நின்ற கோலத்தில் நான்கு கைகளுடன் காட்சியளிக்கிறது. இதன் காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டாகக் கருதப்படுகிறது. உயரம் 1.42 மீ. அகலம் 0.70 மீ.

## திருமால்-6

அரியலூர் வட்டம் திருமழபாடி என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. சக்கரம், சங்கு ஆகிய ஆயுதங்களுடன் மேற்கைகள் இரண்டும், கீழ் வலக்கையில் முழங்கைப் பகுதிவரை உடைந்தும், இடக்கை இடையின் கீழ்ப்புறம் ஊரு முத்திரையிலும்

அமைந்துள்ளன. இதனைக் கி.பி. 16-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஜயநகரக்காலக் கலையாகக் கருதலாம். உயரம் 1.10 மீ. அகலம் 0.56 மீ.

**திருமால்-7**

உடையார்பாளையம் வட்டம் முட்டுவாஞ்சேரி என்னும் கிராமத்திலிருந்து சேகரிக்கப்பட்டது. இச்சிற்பத்தின் மேனி நேர்த்தியாகச் செதுக்கப்படாமலும் முற்றுப்பெறாத நிலையிலும் காட்சியளிக்கிறது இச்சிற்பத்தில் முழங்காலுக்குக் கீழ் உள்ள பகுதி உடைந்துள்ளது. இது கி.பி. 16-17--ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 72 செ.மீ. அகலம் 41 செ.மீ.

**திருமகள்-1**

கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வடக்கேயுள்ள இளைய பெருமாள்நல்லூர் என்ற சிற்றூரிலிருந்து இச்சிற்பம் சேகரிக்கப்பட்டது- இவ்வூரில் உள்ள கல்லடை ஏரியை ஆழப்படுத்தும்போது கிடைத்தது. வலக்கரம் நீலோத்பலமலரைப் பிடித்தும், இடக்கரம் லோல முத்திரையிலும், கரண்ட மகுடம் தலையிலும், சிரச்சக்கரம் பின்தலையிலும் அலங்கரிக்கின்றன. நீண்டகாலமாக மண்ணில் புதையுண்டு வெளிப்பட்ட சிற்பமாதலால் இதன்மீது கருப்புப் புள்ளிகள் படிந்தும் பொறிந்தும் காணப்படுகிறது. இச்சிற்பம் இராஜேந்திர சோழன் காலத்திய கலைப்படைப்பாகக் கருதப்படுகிறது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 135 செ.மீ. தோள் அகலம் 40 செ.மீ.

**திருமகள்-2**

அரியலூர் வட்டம் காமராசவல்லி என்ற ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டதாகும். இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. கி.பி. 13-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.

**திருமகள்-3**

கங்கைகொண்ட சோழபுரத்தை ஒட்டிய பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டது. இச்சிற்பத்தின் தலையும், மார்புக்குக் கீழுள்ள உடற்பகுதியும் இன்றித் தனித்துண்டுச் சிற்பமாகக் காணப்படுகிறது. திருமால் குழுவைச் சார்ந்த தேவியர் ஒருவரது உருவமாக இருத்தல் வேண்டும். காலம் கி பி. 12-ஆம் நூற்றாண்டு- உயரம் 35 செ.மீ. அகலம் 65 செ.மீ.

### நிலமகள்-1

அரியலூர் வட்டம் கொட்டரை என்னும் ஊரிலிருந்து சேரிரிக்கப் பட்டது. இடது கையில் தாமரை மலரைப் பிடித்து வலது கையைத் தாழ்கையாகக் கொண்டுள்ளது. கொட்டரை விண்ணகரத்திற்குரிய திருமாலின் குழுவைச் சார்ந்த நிலமகளின் இச்சிற்பம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 1.35 மீ. அகலம் 0.55 செ மீ.

### நிலமகள்-2

அரியலூர் வட்டம், புதுக்கோட்டை என்ற ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டது. இரண்டு கைகளுடன் திரிபங்கத்தில் நின்ற கோலத்தில் காட்சியளிக்கின்றது. இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை மடிப்புகளுடைய ஆடையும், இடையின் பக்கங்களில் முடிச்சுகளுடன் சரிந்து தொங்கும் ஆடைக்கட்டும் இச்சிலையை வனப்பூட்டுகின்றன. இச்சிற்பம் கி.பி. 11, 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 150 செ.மீ அகலம் 43 செ.மீ.

### நிலமகள்-3

உடையார் பாளையம் வட்டம் குருவாலப்பர் கோயில் என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. இரண்டு கைகளுடன் இச்சிற்பம் நின்ற கோலத்தில் காட்சியளிக்கிறது. கரியநிறக் கல்லைக் கொண்டு வழவழப்பாக வடிக்கப்பட்டுள்ளது. இதன் தலை தனித்துண்டாகக் காணப்படுகிறது. 17, 18-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இதன் உயரம் 110 செ.மீ. அகலம் 48 செ.மீ.

### விசுவச்சேனர்

கங்கை கொண்ட சோழபுரத்தை ஒட்டிய பகுதியைச் சார்ந்தது. உயர்ந்த பீடத்தின் மீது வலது காலைத் தொங்கவிட்டு இடது காலை மடித்தவாறு நான்கு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காட்சியளிக்கிறது. மேல் வலக்கை சக்கரத்தையும், இடக்கை சங்கினையும் பற்றியுள்ளன. கீழ் இடக்கை தாமரைத் தண்டைப் பிடித்துள்ளது. இதன் பீடத்தின் முன்புறம் கண்டப்படையினைக் குந்து சிம்மம் அலங்கரிக்கிறது. கி.பி. 12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. பீடம் முதல் முடிவரை உயரம் 75 செ மீ. அகலம் 40 செ.மீ.

### குந்து சிம்மம்

அரியலூர் வட்டம் திருமழபாடியிலிருந்து எடுத்து வரப்பட்டது. பீடத்தின் மீது பின்கால்களை அமர்த்தியும் முன் கால்கள்

*இரண்டையும் செங்குத்தாக ஊன்றியவாறும் சிறும் சிம்மமாக் வடிவமைக்கப்பட்டுள்ளது. சோழர் காலத் தூணின் கீழ்ப்பகுதியை அலங்கரித்த குந்து சிம்மம் மட்டும் இச்சிற்பத்தில் தற்போது எஞ்சியுள்ளது. இது கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 76 செ.மீ. அகலம் 30 செ.மீ. நீளம் 46 செ.மீ.*

### குந்துசிம்மங்கள்

*அரியலூர்ப் பகுதியிலிருந்து கொண்டுவரப்பட்டது. பின்கால்களைப் பீடத்தில் அமர்த்தி முன்கால்களை நீட்டி ஊன்றியவாறு குந்து சிம்மங்களாகக் காட்சியளிக்கின்றன. இச்சிம்மங்களின் தலை மீது தாங்கும் தூண்களின் உடற்பகுதி உடைந்துள்ளது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை. உயரம் 83 செ.மீ. அகலம் 28 செ.மீ.*

### சிம்மத்தூண்

*திருமழபாடியிலிருந்து சேகரிக்கப்பட்டதாகும். எண்பட்டை வடிவான பூவேலைப்பாடுமிக்க தூணைத் தலையில் தாங்கும் வண்ணம் குந்துசிம்மம் அமைந்துள்ளது. அடர்ந்த பிடரி பெற்று மிகவும் இயற்கையாகக் காணப்படுகிறது. இதன் முன்கால்கள் உடைந்துள்ளன, முகத்தின் வலப்புறம் சிதைந்துள்ளது. தூணின் மேல் பகுதியும் சிதைந்துள்ளது. உயரம் 1 மீ. தூணின் சுற்றளவு 75 செ.மீ.*

### அய்யனார்-1

*குருவாலப்பர்கோயில் என்னும் ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டது அரைவட்டவடிவ பீடத்தின் மீது இடது காலைக் குத்திட்டு, வலது காலைத் தாழத் தொங்கவிட்டு இரண்டு கைகளுடன் இருந்த கோலத்தில் இச்சிற்பம் வடிவமைக்கப்பட்டுள்ளது. நெற்றியைச் சுற்றிலும் முத்தாரங்களும் முத்துப்பட்டமும், காதுகளில் வட்டக் குழையும், கழுத்தில் சிறுமணிகள் கோர்த்த முத்துவடமும், பெரு மணிகள் கோத்த மணிவடமும் அலங்கரிக்கின்றன. வலக்கை தோள் வரை உடைந்துள்ளது. கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தது. முதலாம் இராசேந்திரன் காலத்தில் உருவாக்கப்பட்ட கங்கை கொண்ட சோழபுரத்து அய்யனார் கோயிலுக்குரியது. உயரம் 1 மீட்டர். தோள் அகலம் 35 செ.மீ. இச்சிலை வெண்மையாகத் தோற்றமளிக்கிறது.*

### அய்யனார்-2

அரியலூர் வட்டம், திருமானூர் என்ற ஊரிலிருந்து எடுத்து வரப்பட்டது. இடது காலைக் குத்திட்டவாறு மடித்து, வலது காலைத் தொங்கவிட்டு இரண்டு கைகளுடன் அமர்ந்த நிலையில் உள்ளது. இடுப்புக்குக் கீழ்ப்பகுதி உடைந்துள்ளது. முழங்காலுக்குக் கீழாக யோக பட்டம் வளைந்து செல்கிறது. கி.பி. 11-12-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. உயரம் 38 செ.மீ. அகலம் 30 செ.மீ.

### வீரன்

திருமழபாடி என்ற ஊரிலிருந்து சேகரிக்கப்பட்டது. இரண்டு கைகளுடன் நின்ற கோலத்தில், வலக்கை கதையின் மீது அமைந்தும், இடக்கை நீண்ட வாளைப் பற்றியும் உள்ளன. இடப்புறம் சரிந்த கொண்டை காட்டப்பட்டுள்ளது. முகத்தில் மீசை உள்ளது. கி.பி. 16-17-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வீரனின் உருவமாகக் கருதப்படுகிறது. உயரம் 78 செ.மீ. தோள் அகலம் 24 செ.மீ.

### இரு தேவியருடன் குலோத்துங்கன்

சிதம்பரத்திலிருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. செவ்வக வடிவுடைய நீண்ட பலகைக்கல்லில் நடுவில் குலோத்துங்கனும் இரு பக்கங்களிலும் தேவியர் இருவருமாக அஞ்சலித்து நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளனர். இடுப்பில் கோவணம் தரித்து மேலுடலில் ஆடையின்றி எளிய தோற்றத்துடன் இருகைகளைக் கூப்பிப் பணிவோடு வணங்கி நிற்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளான். முகத்தில் மீசையும், அடர்த்த தாடியும் தரித்துள்ளான். வலது முன் கையில் கங்கணம் மட்டும் அணிந்துள்ளான். ஏனைய உறுப்புகளில் அணிகள் இல்லை. இவ்வுருவின் உயரம் 45 செ.மீ. அகலம் 18 செ.மீ. வலப்புறத்தில் கைகளைக் கூப்பி நிற்கும் தேவியின் உருவம் உருவில் பெரியது. இவளது தலையை வலப்புறம் சரிந்த அழகிய கொண்டை அலங்கரிக்கிறது. பணிவோடு வணங்கி நின்ற கோலத்தில் இவள் காட்டப்பட்டுள்ளாள். உயரம் 33 செ.மீ. அகலம் 11 செ.மீ. இடப்புறம் நிற்கும் தேவி இடையை இடப்புறம் ஒடித்துப் பணிவோடு வணங்கி நிற்கிறாள். தலையில் இடப்புறம் சரிந்த கொண்டை வனப்பூட்டுகிறது. உயரம் 30 செ.மீ. அகலம் 11 செ.மீ

தில்லை நடராசர் கோயிலில் கீழ்த்திசையை அலங்கரிக்கும் ராச கோபுரத்தைத் தம் தேவியுடன் அடிக்கல் நாட்டி விண்ணை முட்டும் வானளாவிய கோபுரத்தைத் தோற்றுவித்த மாமன்னனும்

தில்லையம்பதியில் பல்வேறு திருப்பணிகளைச் செய்வித்து விரிவு படுத்திய பெருமை உடையவனுமாகிய முதலாம் குலோத்துங்க சோழன் அவன் தேவியரின் உருவங்களாக இவை இருத்தல் வேண்டும்.

### முனிவர்

கங்கைகொண்ட சோழபுரத்தை ஒட்டிய பகுதியிலிருந்து சேகரிக்கப்பட்டதாகும். இரண்டு கைகளுடன் அமர்ந்த கோலத்தில் காணப்படுகிறது. தலையில் முடியும், முகத்தில் தாடியும், மீசையும் தரித்துள்ளது. வயிறு சற்று பெருத்துக் குட்டையான அங்கங்களுடன் திகழ்கின்றது. உயரம் 29 செ.மீ. அகலம் 20 செ.மீ.

### புத்தர்-1

அரியலூர் வட்டம் கீழக்கொளத்தூர் என்னும் சிற்றூரிலிருந்து சேகரிக்கப்பட்டது. அரைவட்ட வடிவான இருக்கைமீது இடது காலை மடித்து வலது காலை அதன் மீது வைத்து பத்மாசனத்தில் இரண்டு கைகளுடன் தியான நிலையில் வீற்றிருக்கிறது. இரு கைகளும் இணைந்து தியான முத்திரையில் அமைந்துள்ளன. வலது உள்ளங்கையில் தர்மச்சக்கரம் காட்டப்பட்டுள்ளது. தலையைச் சுற்றிலும் வரிசைகளில் சுருண்ட கேசங்களும், கூம்பு வடிவில் பூரிமமும், தலையைச் சுற்றிலும் ஒளிவட்டமும் காட்டப்பட்டுள்ளன. தொள்ளைக் காதுகளாகவும், நெற்றியில் திலகத்துடனும் உள்ளது. தோளிலிருந்து சரிந்து நிற்கும் அங்கியும், இடையிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை ஆடையும் காணப்படுகிறது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பமாகக் கருதலாம். உயரம் 73 செ.மீ. அகலம் 30 செ.மீ.

### புத்தர்-2

தஞ்சை மாவட்டம், வலங்கைமான் புத்தூரிலிருந்து சேகரிக்கப் பட்டது. பத்மாசனத்தில் தியானமுத்திரையில் காணப்படுகிறது. கி. பி. 10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பண்டையநாளில் வலங்கைமான் பகுதியின் புத்தர் கோயில் ஒன்று இருந்ததையும், அச்சமயம் பரவி நின்றதையும் இச்சிற்பம் நமக்கு உணர்த்துகிறது. இதன் உயரம் 27 செ.மீ. அகலம் 15 செ.மீ.

### முக்குடைநாதர்

அரியலூர் வட்டம், கொட்டரை என்னும் சிற்றூரிலிருந்து கொண்டு வரப்பட்டது. இவ்வூரில் சில சைவ, வைணவ சிற்பங்களும்

சேகரிக்கப்பட்டுள்ளன. எனவே சைவம், வைணவம், சமணம் ஆகிய மூன்று சமயங்களும் இவ்வூரில் இருந்ததற்கான சான்றுகளை அறிய முடிகிறது. அர்த்தபரியங்காசனத்தில் இரண்டு கைகளுடன் தியான கோலத்தில் வீற்றிருக்கின்றது. ஆழ்ந்த தியானத்தில் தோன்றும் முக்குடை-நாதரின் முகம் தேய்ந்து, கீழ்த்தாடை சிதைந்துள்ளது. திகம்பரத்திருவுருவாய் இச்சிற்பம் வடிவமைக்கப் பட்டுள்ளது. தோள்மீது அரைவட்ட வடிவில் ஜுவாலைகள் அலங்கரிக்கும் பிரபைக்கு மேல் முக்குடையும் காட்டப்பட்டுள்ளது. கி,பி. 14-15-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த விஜயநகரக் கலையை அடையாளம் காட்டுவதாக அமைகிறது. முக்குடை-வரை இதன் உயரம் 1.03 மீ. தோள் அகலம் 0.35 மீ.

# கங்கைகொண்ட சோழபுரத்தைச் சுற்றியுள்ள ஊர்கள்

கங்கைகொண்ட சோழபுரத்தைச் சுற்றிப் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர்கள் உள்ளன. இங்குக் காணப்படும் கோயில்கள், சிற்பங்கள் கங்கைகொண்ட சோழபுர வரலாற்றுக்கு மேலும் பெருமை சேர்க்கின்றன.

**கொல்லாபுரம்**

4 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இரண்டாம் இராசேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியில் 'இரட்டபாடி ஏழரை இலக்கமுங் கொண்டு கொல்லாபுரத்து ஜயஸ்தம்பம் நாட்டி' என்று குறிப்பிடப்படுகிறது. சாளுக்கியர்களின் தலைநகரான கொல்லா புரத்தை வெற்றி கொண்டதன் நினைவாக இவ்வூருக்கு கொல்லாபுரம் என்று பெயரிட்டிருக்கலாம். இங்கு 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அபராதரட்சதர் கோயில் உள்ளது.

**குருவாலப்பர் கோயில்**

ஜெயங்கொண்டம் சாலையில் 2 கி.மீ. தொலைவில் அமைந் துள்ள இவ்வூரில் வீரநாராயணப் பெருமாள் கோயில் என்ற பெருமாள் கோயில் உள்ளது. இவ்வூர் குருகை காவலப்பர் என்ற முனிவர் யோகம் செய்த இடமும், அடக்கம் ஆன இடமும் ஆகும். இவருடைய குருவாகத் திகழ்ந்தவர் நாதமுனிகள். நாதமுனிகளும் இவ்வூரில் அடக்கம் அடைந்ததாகக் கூறப்படுகிறது.

**முத்து சேர்வா மடம்**

கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. 11-12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த வரதராஜப்பெருமாள் கோயில் இங்கு உள்ளது. உடையார் பாளையம் பாளையக்காரர்களால் இக்கோயில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது.

**நெல்லித்தோப்பு**

இவ்வூர் 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இங்குப் பள்ளி கொண்ட அரங்கநாதர் கோயில் ஒன்று உள்ளது. நாதமுனிகளால்

மங்களாசாசனம் செய்யப் பெற்றதாகக் கூறப்படுகிறது. ஆதலால் இக்கோயிலுக்கு நாதமுனிரங்கநாதர் கோயில் என்ற மற்றொரு பெயரும் விளங்குகிறது. இங்குள்ள மகாமண்டபத் தூண்களில் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

## இளையபெருமாள் நல்லூர்

கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து வடக்கே 2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் சிவன் கோயில் ஒன்று உள்ளது. இவ்வூரிலிருந்து சேகரிக்கப்பட்ட 11,12-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருமால் சிற்பமும், அம்மன் சிற்பமும் அகழ்வைப்பகத்தில் உள்ளன.

## உட்கோட்டை

தென்மேற்கே 4 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கோட்டை மதிற்சுவருக்குள் இவ்வூர் இருந்ததால் உட்கோட்டை என அழைக்கப்பட்டிருக்கலாம். இவ்வூரில் உள்ள கோயில்கள் 16,17-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

## ஆயுதக் களம்

உட்கோட்டையிலிருந்து தென்மேற்கே 5 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது. போர்ப்படை ஆயுதங்கள் செய்த இடமாக விளங்கியதால் 'ஆயுதக் களம்' என வழங்கியிருக்கலாம். இவ்வூரில் உள்ள ஏரிக்கரையிலிருந்து அய்யனார் சிற்பம் ஒன்று சேகரிக்கப்பட்டுள்ளது.

## கடாரங்கொண்டான்

இராசேந்திர சோழன் வெற்றி பெற்ற நாடுகளில் கடாரமும் ஒன்று. அதன் நினைவாக இவ்வூர் இப்பெயரில் அழைக்கப்பெற்றிருக்கலாம். இவ்வூர்ச் சோழகங்கம் எனப்படும் பொன்னேரியை ஒட்டி அமைந்துள்ளது. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சப்தமாதர் சிற்பங்கள் இங்குக் கோயிலில் வழிபடப் பெறுகின்றன.

## வீர சோழபுரம்

6 கி. மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இராசேந்திர சோழனின் சிறப்புப் பெயர்களில் ஒன்றான வீர சோழன் என்ற பெயரால் வீரசோழபுரம் என அழைக்கப்படுகிறது.

திரு. மா. சந்திரமூர்த்தி. எம்.ஏ.,

**அழகர் கோயில்**

வடக்குத் திசையில் 5 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இங்கு கள்ளழகர் என்ற பெயரில் சோழர்காலச் சிவன் கோயில் ஒன்று உள்ளது. சிவன் கோயிலைப் பார்த்த நிலையில் சுமார் 80 அடி உயரமான சுதையால் செய்யப்பட்ட யானைச் சிற்பம் உள்ளது. நாயக்கர் காலக் கலைப்பணிக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

**மெய் காவல் புத்தூர்**

சோழப் படை வீரர்கள் தங்கிய இடமாக மெய்காவல் புத்தூர் கூறப்படுகிறது.

இவ்வாறு கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றியுள்ள பல ஊர்கள் வரலாற்றுச் சிறப்புடன் திகழ்கின்றன.

## வெற்றி தந்த கலைச்செல்வங்கள்

இராசேந்திர சோழன் தான் வெற்றி பெற்ற நாடுகளிலிருந்து தனது வெற்றியின் அடையாளமாகக் கலையழகு மிக்க செப்புத் திருமேனிகளையும், சிற்பங்களையும் கங்கை கொண்ட சோழபுரத் திற்கு வழிபாட்டிற்காகக் கொண்டு வந்தான். இவ்வூரைச் சுற்றி யுள்ள பல கிராமங்களில் சாளுக்கிய, கலிங்க நாட்டுச் சிற்பங்கள் வழிபாட்டில் உள்ளன.

**திரைலோக்கி**

கங்கை கொண்ட சோழபுரம்-குடந்தை சாலையில் சுமார் 18 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இங்குள்ள கோயிலில் முருகன், வள்ளி, தெய்வானை சிற்பங்கள் உள்ளன. இவை சாளுக்கிய நாட்டுச் சிற்பங்களாகும். மேலும் இங்கு நந்தியின் மீது சிவபெருமானும், உமையும் உமாமகேசுவரராக அமைந் திருப்பதைக் காணலாம். இது நுளம்பரது கலைப் படைப்பாகும்.

**மண்மலை**

கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகே இவ்வூர் அமைந் துள்ளது. இங்குச் சாளுக்கிய நாட்டைச் சேர்ந்த அழகு மிக்க துர்க்கை சிற்பம் உள்ளது.

## கீழசெங்கமேடு

கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து தென்கிழக்கே 3 கி.மீ. தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூரில் பைரவர், பைரவி, சிற்பங்கள் உள்ளன. இவை கலிங்க நாட்டுச் சிற்பங்களாகும். இதனைத் தொல்பொருள் ஆய்வுத்துறை தனது பாதுகாப்பில் எடுத்துப் பாதுகாத்து வருகிறது.

## சலுப்பை

இவ்வூர் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து வடக்கே 5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இவ்வூரில் சாளுக்கிய நாட்டுக் கலைப் பாணியுடன் கூடிய துர்க்கையின் சிற்பம் உள்ளது.

## வீராரெட்டித் தெரு

கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து வடக்கே 3 கி.மீ. தொலைவில் அமைந்த இவ்வூரில் நுளம்பர் கலைப்பாணியுடன் கூடிய துர்க்கை சிற்பம் ஒன்று உள்ளது.

## கணக்கு விநாயகர் கோயில்

இங்குள்ள விநாயகர் சிற்பம் சாளுக்கியக் கலைப்பாணியுடன் விளங்குகிறது.

# பின்னிணைப்புகள்

## முதல் இராசேந்திரசோழனின் வரலாற்றுக் குறிப்புகள்

| | | |
|---|---|---|
| தந்தை | : | இராசராசசோழன் |
| தாய் | : | திரிபுவன மாதேவி என வழங்கும் வானவன் மாதேவி |
| பிறப்பு | : | மார்கழித்திங்கள் திருவாதிரை நாள் |
| இயற்பெயர் | : | மதுராந்தகன் |
| பட்டப்பெயர் | : | இராசேந்திரன் |
| ஆட்சிக்காலம் | : | கி.பி. 1012-1044 |
| மறைவு | : | கி.பி. 1044 |

### சிறப்புப் பெயர்கள்

1 உத்தம சோழன்
2 சோழேந்திரசிம்மன்
3 விக்ரம சோழன்
4 முடி கொண்ட சோழன்
5 பண்டிதசோழன்
6 கடாரங் கொண்ட சோழன்
7 கங்கைகொண்டசோழன்
8 வீரராசேந்திரன்
9 பூர்வதேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட அய்யன்
10 அதிசய சோழன்
11 ஜயசிம்மசரபன்
12 மலைநாடு கொண்டான்
13 மண்ணைக்கொண்டசோழன்
14 மகிபாலகுலகாலன்
15 வீரசோழன்
16 இராசராசேந்திரன்
17 மதுராந்தகன்

18 இரட்டபாடிகொண்டசோழன்
19 நிருபதிவாகரன்
20 பார்த்திவேந்திரன்
21 மனுகுலசோழன்
22 இராசவித்யாதரன்
23 உதாரவிடங்கன்
24 தானவினோதரன்
25 பராக்கிரமசோழன்

## இராசேந்திரசோழனின் மனைவியர், மக்கள்

1 முக்கோக்கிழானடிகள்
2 அரிந்தவன் மாதேவி
3 வானவன் மாதேவி (ஆகிய) திரிபுவனமாதேவி
4 வீரமாதேவி
5 பஞ்சவன்மாதேவி

### பெண் மக்கள்

1 அருமொழிநங்கை
2 அம்மங்கை

### ஆண் மக்கள்

1 இராசாதிராசன்
2 இரண்டாம் இராசேந்திரன்
3 இராமகேந்திரன்
4 வீரராசேந்திரன்

## இராசேந்திரன் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள்

1 கங்கைகொண்ட சோழபுரம் கங்கைகொண்ட சோழீசுவரர் கோயில்
2 கூழம்பந்தல் கங்கைகொண்ட சோழீசுவரர் கோயில்
3 திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயில்
4 திருவலஞ்சுழி பைரவர் கோயில்
5 நாகப்பட்டினம் நாகைக்காரோணம்
6 மேல்பாடி அறிஞ்சிகை ஈஸ்வரம்
7 அகரம் கைலாசநாதர் கோயில்
8 திருவையாறு தென்கைலாயம்
9 ஆத்தூர் சோமநாதசாமி கோயில்

10 நார்த்தாமலை திருமலைக் கடம்பர் கோயில்
11 சேரன்மகாதேவி ராமசாமிகோயில் அம்மளாதேஸ்வரர் கோயில்
12 மாம்பாக்கம் முருகேசுவரசாமி கோயில்
13 கங்கைகொண்டான் கைலாசபதி கோயில்
14 சோழபுரம் இராசராசேசுவரம்
15 செங்குன்றம் செயங்கொண்ட சோழீசுவரர்
16 திருப்பத்தூர் அய்யனார் கோயில்
17 இராமநாதன் கோயில் பஞ்சவன் மாதேவீசுவரம்
18 கோலார் கோலாம்மாகோயில்
19 பெலத்தூரு பானேசுவரர் கோயில்
20 நந்திகொண்டா மல்லேசுவரர் கோயில்
21 சிட்டிபெடா பைரவர் கோயில்
22 திருமழபாடி வைத்தியநாதசுவாமி கோயில்
23 மன்னார்கோயில் இராசகோபாலசாமி கோயில்
24 சாத்தூர் மூலஸ்தானம் உடையார் கோயில்
25 கொத்தகரே (மைசூர் மாநிலம்) கோயில்
26 மாதோட்டம் (ஈழம்) சிவன்கோயில்
27 தொட்டமயூர் (சென்னைப்பட்டணம், பெங்களூர் மாவட்டம்) கோயில்
28 காவந்தண்டலம் (செங்கை மாவட்டம்) இராசேந்திர சோழீசுவரம்
29 திருவல்லம் திருவையாறு ஈசுவரம்
30 அழகாத்ரிபுத்தூர் சூரியன் கோயில்
31 வானமங்கை கைலாசநாதர் கோயில்
32 கன்னியாகுமரி கோனேரீசுவரர் கோயில்

## இராசேந்திரசோழன் கால வீரத்தலைவர்களும், அதிகாரிகளும்

1 விக்ரமசேர்ழ சோழியவரையனாகிய அரையன் இராசராசன்
2 கிருஷ்ணன் இராமனான மும்முடிச்சோழப் பிரம்மராயன்
3 மாராயன் அருள்மொழியான உத்தமசோழப் பிரம்மராயன்
4 ஈராயிரவன் பல்லவராயனான உத்தம சோழப் பல்லவரையன்
5 பாண்டியன் சீவல்லபன்
6 வல்லவரையன் வந்தியத்தேவன்
7 உத்தமசோழ மிலாடுடையார்
8 கங்கைகொண்ட மிலாடுடையார்
9 சத்திரிய சிகாமணி கொங்காள்வான்

10 தண்டநாயகன் வீமையனாகிய இராசேந்திர சோழப் பிரம்மராயன்
11 வீரராசேந்திர பிரம்மாதிராசன்
12 உத்தமசோழகோன்
13 உத்தம சோழப் பல்லவராயன்
14 முடிகொண்டசோழ விழுப்பரையன்
15 விக்ரம சோழச் சோழியவரையன்
16 இராசராசபிரம்மராயன்
17 பாண்டி உதயதிவாகரன் இராசராச நல்லூருடையான்
18 நீலன் வெண்காடன் என்ற இராசராச மூவேந்த வேளான்
19 சேனாபதி மதுராந்தகன் பரகேசரி மூவேந்த வேளான்
20 கொடும்பாளூர் இராசேந்திர சோழ இருக்குவேளார்
21 சேனாபதி அரையன் கிடாரங்கொண்ட சோழன் இராசராச அணிமுரிநாடாழ்வான்
22 இராசேந்திரசோழப் பிரம்மராயர்
23 கங்கைகொண்ட சோழப்பல்லவரையன்
24 வில்லவராசன்
25 இராசராசக் குமணராசன்
26 இராசராச மூவேந்த வேளான்
27 குணநிதி அருமொழி மூவேந்த வேளான்
28 விக்ரமசிங்க மூவேந்த வேளான்
29 விக்ரமசோழ மூவேந்த வேளான்
30 இராசராசேந்திர மூவேந்த வேளான்
31 வீரராசேந்திர தமிழதரையர்
32 திருநீலகண்டபட்டர்
33 கொட்டி அதிராத்ரயாஜி
34 காடவராயர்
35 வீரராசேந்திரமுனையதரையர்
36 ஆதித்த சூளாமணி
37 கடாரம் கொண்ட சோழ மூவேந்த வேளான்
38 இரட்டபாடி கொண்ட சோழ மூவேந்த வேளான்
39 ஜநநாத மூவேந்த வேளான்
40 மதுராந்தக மூவேந்த வேளான்
41 இராச மூவேந்த வேளான்
42 வீரசோழ மூவேந்த வேளான்
43 இராசராச விசயபாலர்
44 விக்ரம நாராயண மூவேந்த வேளான்

45 வைகுண்டன்
46 சோழன் விழுப்பரையன்
47 நிருபதிவாகர மூவேந்த வேளான்
48 வீரராசேந்திர கச்சியர்நாடாழ்வான்
49 பார்த்திவேந்திர பிரும்மமாராயர்
50 இராசமாணிக்க மூவேந்த வேளார்
51 மனுகுல சோழ மூவேந்த வேளார்
52 இராச வித்யாதர மூவேந்த வேளார்
53 வீரராசேந்திர மலைப்பிச்சோழர்
54 உதாரவிடங்க மூவேந்த வேளான்
55 மும்முடிசோழ விழுப்பரையர்
56 ஸ்ரீமாதவ பட்டன்
57 சிவ தேவ பட்டன்
58 இருங்கண்டி வேங்கடபட்டன்
59 விரிபுரம் நரசிம்மபட்டன்
60 அத்தாமிபுரம் பட்டன்
61 தானவிநோத மூவேந்த வேளான்
62 பராக்ரமசோழ மூவேந்த வேளான்
63 வில்லவன் மூவேந்த வேளான்
64 இராமதூத வேளான்
65 மாதேவன் பிரும்ம மாராயன்
66 மாதேவன் வெண்காடன்
67 கருணாகரன்

## இராசேந்திரன் காலத்து அறிஞர்கள்

1 சர்வசிவ பண்டிதர்
2 இலகுளீச பண்டிதர்
3 ஈசானசிவ பண்டிதர்
4 நம்பியாண்டார் நம்பி
5 கருவூர்த்தேவர்
6 நம்பிகாட நம்பி
7 நாராயணகவி
8 அமிதசாகரர்
9 குணசாகரர்
10 சதுரானன பண்டிதர்

## கங்கைகொண்ட சோழபுரத்துக்கோயிற் கல்வெட்டுகளுக்குரிய மன்னர்கள்

1 இராசேந்திர சோழன் (பூர்வ தேசமும், கங்கையும், கடாரமும் கொண்டருளின ஐய்யன்)

2 இராசாதிராச சோழன் (கல்யாணபுரமும் கொல்லாபுரமும் கொண்டு ஆனைமேல் துஞ்சின அண்ணல்)

3 வீரராசேந்திர சோழன்

4 வானவன் மகாதேவி (இராசேந்திரனின் தேவி)

5 அம்மங்காதேவி (இராசேந்திரனின் அன்பு மகள்; குலோத்துங்கனின் தாய்)

6 முதல் குலோத்துங்க சோழன்

7 மூன்றாம் குலோத்துங்கன்

8 கன்னோசியைச் சார்ந்த காஹடவால அரசன். சோழர்களின் நண்பன் மதனபாலன்

9 பாண்டியன் சடாவர்மன் சுந்தரபாண்டியன்

10 விக்ரம பாண்டியன்

11 மாறவர்மன் குலசேகரன்

12 வைப்பூர் திருவேங்கட முடையான் ஏகாம்பரநாதக் காங்கேயன்

13 விசயநகரப் பேரரசன் கிருஷ்ணதேவராயன்